விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதின்னான்கு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 ஆவணி 23 செவ்வாய்க்கிழமை (08.09.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 263




# புலிகளுடன் அறவே தொடர்பில்லையெனில்

# நலன்புரி முகாம்களில் உள்ளவர்கள்

# உறவினர்களுடன் தங்க அனுமதிக்கப்படுவர்

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரிடம் ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

நலன்புரி முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளவர்களை அவர்களின் உறவினர்கள், நண்பர்களுடன் தங்க அனுமதியளிக்கப்படும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தம்மிடம் தெரிவித்தார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறியுள்ளது. ஆனால் விடுவிக்கப்படுபவரோ அல்லது அவர்களது உறவினர்களோ, நண்பர்களோ புலிகளுடன் தொடர்பில்லை என்பது முதலில் உறுதிப்படுத்தப்படும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார். (14ஆம் பக்கம் பார்க்க)



## பிரபாகரனுக்கு சிகிச்சையளித்த ஆண் தாதி கொழும்பில் கைது

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு மருத்துவ சிகிச்சைகளை வழங்கிய ஆண் தாதி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். முல்லைத்தீவைச் சேர்ந்த பாலகுமாரன் சண்முகநாதன் என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சிங்கப்பூருக்கு செல்வதற்காக பண்டாரநாயக்க விமான நிலையத்துக்கு சென்ற போது, விமான நிலைய புலனாய்வுப் பிரிவினரால் இவர் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா இடம் பெயர் முகாமொன்றில் தஞ்சம் அடைந்திருந்த குறித்த நபர் ஒரு இலட்சம் ரூபாயை லஞ்சமாக வழங்கி அங்கிருந்து கொழும்புக்குத் தப்பிச் சென்றுள்ளதாக விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாம். (ரு)

## ஐ.நா. அதிகாரியை வெளியேற்றும் அரசின் முடிபு மீள் பரிசீலனையில்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபை சிறுவர் நிதியத்தின் (யுனிசெப்) மூத்த அதிகாரியான ஜேம்ஸ் எல்டரை நாட்டைவிட்டு வெளியேறுமாறு விடுத்த உத்தரவை அரசு மீள் பரிசீலனை செய்து வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

முன்னதாக ஜேம்ஸ் எல்டர் எந்தத் தவறையும் செய்யவில்லை எனத் தெரிவித்திருந்த யுனிசெப், இலங்கை அரசு தனது முடிபை மீள் பரிசீலனை செய்யவில்லை எனில் அதனை தாம் நியூயோர்க்கில் உள்ள ஐ.நா. தலைமையகம் வரைக்கும் எடுத்துச் செல்லவும் தயங்கப் போவதில்லை என்று தெரிவித்திருந்தது.

இது தொடர்பில் நேற்று ஊடகவியலாளரிடம் கருத்துத் தெரிவித்த வெளிவிவகாரத் துறைச் செயலாளரும் ஐக்கிய நாடுகள் சபைக்கான நிரந்தர பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ளவருமான பாலித கோஹன எல்டரின் விடயம் அரசின் (14ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு மா. கல்வி அமைச்சின் நடமாடும் சேவை இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வட மாகாணக் கல்வி அமைச்சும் மாகாணக் கல்வித் திணைக்களமும் இணைந்து கல்வி வலய ரீதியாக நடத்தும் கல்விசார், கல்வி சாராத ஊழியர்களுக்கான நடமாடும் சேவை இன்று ஆரம்பமாகுவதாக வட மாகாண கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா தெரிவித்துள்ளார்.

இந் நடமாடும் சேவையில் முதலாவதாக இன்று வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்தில் ஆரம்பமாவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதனை முன்னிட்டு வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா உட்பட வடக்கு (14ஆம் பக்கம் பார்க்க)

## உருத்திரகுமாரனுக்கு எதிராக அமெ. நடவடிக்கை எடுக்க வேண்டும்

### இலங்கை அரசு வலியுறுத்து

(கொழும்பு)

நாடு கடந்த தமிழீழ அரசு அமைப்பதற்கான செயற் குழுவின் இணைப்பாளரும் சட்டவாளருமான விஸ்வநாதன் உருத்திரகுமாரனுக்கு எதிராக அமெரிக்கா நடவடிக்கை எடுக்க வேண்டும் என இலங்கையரசு வலியுறுத்தியுள்ளது. விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புதிய செயலாளர்நாயகமாக நியமிக்கப்பட்டிருந்த செல்வராசா பத்மநாதன் கைது செய்யப்பட்டு இலங்கைக்கு கொண்டுவரப்பட்டதன் பின்னர் வெளித்தெரியக் கூடிய, தமக்கு ஆபத்தான (02ஆம் பக்கம் பார்க்க)

## சனல்-4 வீடியோக்காட்சி போலியானது ஐ.நா. செயலாளரிடம் கூறியுள்ளேன்

### அமைச்சர் சமரசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

பிரித்தானியாவின் சனல்-4 தொலைக்காட்சி இலங்கை இராணுவத்திற்குப் பாரிய அபகீர்த்தியை ஏற்படுத்தும் வீடியோக் காட்சிகள் தொடர்பாக ஜனாதிபதியின் விதப்புரைக்கமைய நான்கு கட்ட விசாரணைகள் நடத்தப்பட்டன என இடர் முகாமைத்துவம் மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமர சிங்க தெரிவித்தார்.

நேற்று தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் பேசியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்;

அண்மையில் நான் ஜெனீவாவுக்கு சென்றிருந்த போது ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினேன். பிரித்தானியா வின் சனல்-4 தொலைக்காட்சி ஒளிபரப்பிய வீடியோ தொடர்பில் ஒருமணி நேரம் அவருடன் கலந்துரையாடினேன்.

சனல்-4 தொலைக்காட்சி தொடர்பில் அரசின் நிலைப்பாடு (02ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் தேடுதல் 5 இளைஞர்கள் கைது

(கொழும்பு)

கொழும்பு,வெள்ளவத்தை, மட்டக்குழிய, எட்டியாவத்தை ஆகிய இடங்களில் நேற்றுக் காலை முதல் இடம்பெற்ற திடீர் தேடுதல் சோதனை நடவடிக்கைகளில் 5 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விசேட அதிரடிப் படையினரும் பொலிஸாரும் இணைந்து மேற்கொண்ட இந்த நடவடிக்கையில் பலர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். (14ஆம் பக்கம் பார்க்க)

## சனிப்பெயர்ச்சி உங்களுக்கு எப்படி?

நாளைய வலம்புரியில் வெளிவரும்

## முகாம்களில் விடுதலைப் புலிகள் இனங்காணப்பட்டுள்ளனர் அவர்களை இயல்பு வாழ்க்கைக்கு அனுமதிக்க முடியாது

### அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் பிரான்ஸ் வானொலிக்கு பேட்டி

(கொழும்பு)

முகாம்களில் குறிப்பிடத்தக்களவு விடுதலைப் புலிகள் இருப்பது அடையாளப்படுத்தப்பட்டிருக்கின்றது. அவர்கள் மற்றவர்களிடம் இருந்து தனிமைப்படுத்தப்பட வேண்டும். அவர்களை உடனடியாக இயல்பு வாழ்வுக்குத் திருப்பி அனுப்ப முடியாது.

ஏனெனில் இந்த இலக்கை அடைவதற்காக ஆயிரக்கணக்கான படையினர் தமது உயிர்களைப் பலி கொடுத்திருக்கிறார்கள் என்பதை மறந்துவிடக்கூடாது. இவ்வாறு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

தற்போதைய அரசியல் நிலைப்பாடுகள் குறித்து பிரான்ஸ் நாட்டின் வானொலிக்கு அளித்த (02ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஐரோப்பிய ஒன்றியத்தின் தடையையும் மீறி செக்குடியரசு இலங்கைக்கு ஆயுதம் வழங்கியது

(கொழும்பு)

இலங்கைக்கு ஆயுதங்களை விற்கவேண்டாம் என ஐரோப்பிய ஒன்றியம் தடைவிதித்திருந்த போதும் செக்குடியரசு நான்காம் கட்ட ஈழப் போரின் முக்கிய காலப்பகுதியில் இலங்கைக்கு ஆயுதங்களை விநியோகம் செய்தது எனத்தெரிவிக்கப்படுகின்றது.

செக் குடியரசைச் சேர்ந்த ஆயுத விற்பனை முகவரான மிச்சல் சிமாஸ் இதனைத் தெரிவித்துள்ளார்.

வெளிப்படையான சண்டை நடைபெறும் இடங்களுக்கு ஆயுதங் களை விற்பனை செய்யக்கூடாது என ஐரோப்பிய ஒன்றியம் தடை விதித்துள்ளது.

செக் குடியரசு, ஒன்றியத்தின் உறுப்பு நாபாகையால் இந்தத்தடை அதற்கும் பொருந்தும். இதன் அடிப்படையில் இலங்கைக்கு அது ஆயுதங்களை விற்பனைசெய்ய முடியாது.

ஆனாலும் இவற்றை எல்லாம் மீறி நான்காம் ஈழப் போர் கால கட்டத்தில் செக்குடியரசு வெளியே தெரியாமல் இலங்கைக்கு ஆயுதங்களை விற்பனை செய்தது என்பதை மிச்சல் சிமாஸ் உறுதிப்படுத்தினார்..

ஐரோப்பிய ஒன்றியத்தின் தடையை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி நோர்வே மற்றும் சுவீடன் நாடுகள் இலங்கைக்கான செக் குடியரசின் ஆயுத விற்பனையைத்தடுக்க முயற்சித்தன எனவும் அவர் குற்றம் சாட்டினார்.

அதிகரித்து வந்த அழுத்தம் காரணமாக இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் இலங்கைக்கு ஆயுதங்களை விற்பதற்கான அனுமதிகள் எவையும் வழங்கப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

விடுதலைப் புலிகள் அமைப்புக்கு தமது நாடு ஒருபோதும் ஆயுதங்களை விற்பனை செய்ததில்லை எனக் கூறிய அவர், மியான்மர் அல்லது வடகொரியா போன்ற இரண்டாம் தரப்புக்கள் மூலமாக கொள்வனவுக் கட்டளைகளைச் சமர்பித்து அவர்கள் ஆயுதங்களைப் பெற்றிருக்கலாம் எனவும் தெளிவு படுத்தினார்.

விடுதலைப் புலிகளிடம் இருந்த செக் தயாரிப்பான இரு சிலின் ரக வானூர்திகள் குறித் துக் கேட்டதற்கு அதன் தொடர் இலக்கங்களை வைத்து தாம் மேற்கொண்ட விசாரணையில் அவை கனடாவைச் சேர்ந்த வானூர்தி செலுத்துனர் பயிற்சிப் பள்ளி ஒன்றிடம் இருந்தவை என்பதைக் கண்டறிந்துள்ளனர் என்றார். (ந-5)

## பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

நிரந்தர நியமனம் பெறுவது தொடர்பில் ஆராய்வதற்கு சகல பகுதி நேர ஆசிரியர்களையும் நாளை பிற்பகல் 2 மணிக்கு ஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள யாழ். உயர் கல் விக்கல்லூரியில் ஒன்று கூடுமாறு பகுதி நேர ஆங்கில ஆசிரியர் சங்கம் கேட்டுள்ளது. (ந-5)


பிரத்தியேக வகுப்புகள்
(2010, Repeat)
Physics,Chemistry பாட வகுப்புகள்,மேலதிக பயிற்சிகள்,கடந்த கால வினாக்கள்(1979-இன்றுவரை) தேவையான அணுகுமுறைகளுடனும், விளக்கங்களுடனும் கற்றுத்தரப்படும்.
தொடர்புகளுக்கு : 021 222 8797
(C-3269)


## முகாம்களில் விடுதலைப் புலிகள் இனங்காணப்பட...

பேட்டியிலேயே அவர் மேற்கொண்டவாறு கூறினார்.

அமைச்சர் பீரிஸ் அளித்த பேட்டியின் விபரம் வருமாறு;

கைப்பற்றப்பட்ட பகுதிகளில் இருந்து இன்னும் ஆயுதங்கள் மீட்கப்பட்டு வருகின்றன. முகாம்களில் உள்ள விடுதலைப் புலிகளை விடுவித்தால் அவர்கள் இலகுவாக தாம் புதைத்து வைத்த ஆயுதங்களை மீண்டும் தோண்டி எடுத்து விடுவார்கள்.

ஒன்று அல்லது இரண்டு பெரியசம்பவங்கள் எல்லாவற்றையும் அழித்து விடும். கடந்த சில மாதங்களில் பெருமளவு இழப்புக்களையும் மனித துயர்களையும் சுமந்து பெறப்பட்ட எல்லாவற்றையும் சிதைத்துவிடும்.

இடம் பெயர்ந்த மக்கள் தொடர்பில் நாம் அவசரமாக செய்ய வேண்டிய பணிகள் இருக்கின்றன என்பது எமக்குத் தெரியும். அவர்கள் சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தப்பட வேண்டும். பருவ மழை பெரும் பிரச்சினைகளை உருவாக்கப் போகின்றது.

கண்ணிவெடிகளை அகற்ற வேண்டும் அதுதான் இப்போதுள்ள.சிக்கல். போர் முடிவடைந்த பின்னர் அந்தப் பகுதிகள் மனித நடமாட்டத்திற்கு ஆபத்தான இடங்களாக இருக்கின்றன.

சிங்களப்படையினரால் தமிழர்கள் படுகொலை செய்யப்படும் காட்சிகள் அடங்கிய காணொலி குறித்து அனைத்துலக விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பதில் அழுத்தங்கள் வந்தாலும் அது தொடர்பில் எந்தவித விசாரணைகளும் நடத்தப்படாது.

அண்மையில் இலங்கைகான ஜனநாயக ஊடகவியலாளர்கள் என்று கூறிக்கொள்பவர்களால் வெளியிடப்பட்ட காணொலி விடுதலைப் புலிகளின் அனுதாபிகளால் போலியாகத் தயாரிக்கப்பட்டது. அது முற்றிலும் கற்பனையானஒன்று.

இலங்கையை மையப்படுத்தி எத்தனை அனைத்துலக விசாரணைகளைத்தான் நடத்துவது?

இலங்கையில் மனித உரிமைகள் தொடர்பில் ஐரோப்பிய ஆணைக்குழுவினால் விசாரணைகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இந்தக் கணக்கில் போனால் இலங்கை ஒரு இறைமை உள்ள அரசாக இருக்கும் போல் தோன்றவில்லை.

படையினரால் கொல்லப்பட்ட பின்னர் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தனது உடலத்தை தானே முகத்தில் ஆரவாரமான சிரிப்புடன் பார்த்துக்கொண்டிருப்பது போன்று சில பொய்யான புனைவுகளைத் தயாரித்து தொலைக்காட்சில் புலிகளின் அனுதாபிகள் வெளியிட்டிருந்தார்கள்.

தற்போது வெளியாகி உள்ள காணொலி குறித்து இலங்கை ஊடகங்களில் இருக்கும் தொழில்நுட்பவியலாளர்கள் சிலர் ஆய்வுகளை மேற் கொண்டிருக்கிறார்கள். அதில் பல தொழில்நுட்ப கோளாறுகள்- திரிவுபடுத்தல்கள் இருப்பதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். அந்தக் காணொலி போலியானது என் பதை அந்த ஆய்வு தெளிவாக வெளிப்படுத்துகின்றது. ஆனாலும் அரசு அது தொடர்பான ஆதாரங்கள் குறித்துக் கவனம் செலுத்தும்.

யாராலும் செய்ய முடியாத ஒன்றை தற்போது இலங்கை தனக்கு இருக்கக்கூடிய குறைந்த வளங்களுடன் மேற்கொண்டுள்ளது. படைத்துறை அர்த்தத்தில் சொன்னால் பயங்கரவாதத்தைத் தோற்கடிப்பது என்பதே அதன் பொருள் ஆனால் சில நாடுகள் இது தொடர்பில் எப்படி எதிர்வினை ஆற்றுகின்றன? அவர்கள் அதை வரவேற்கிறார்களா? இலங்கையுடனான ஒருமைப்பாட்டை அவர்கள் வெளிப்படுத்துகிறார்களா? நட்பையும் நல்லெண்ணத்தையும் அவர்கள் முன்வைக்கிறார்களா? இல்லை. எப்போதுமே விமர்சனம் செய்ய வேண்டியது. நீதி வழங்குவது போன்ற பாவனை எளியவர்களைக் கொடுமைப்படுத்துவது இதுதான் நடக்கிறது.

(ந-5)

## உருத்திரகுமாரனுக்கு எதிராக...

தலைவராக உருத்திரகுமாரன் உருவெடுப் பார் என கருதப்படுகிறது.

இதனாலேயே அண்மையில் தமிழர்கள் சிங்களப் படையினரால் படுகொலை செய்யப்படும் காணொலி வெளியிடப்பட்டதன் பின்னணியில் உருத்திரகுமாரன் இருந்தார் எனவும் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான சிங்கள ஊடகவியலாளர்களுக்கு பணம் கொடுத்து அந்தக் காணொலியை அவர் வெளியிட வைத்தார் எனவும் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ உருத்திரகுமாரன் மீது குற்றம் சாட்டியிருந்தார்.

தெற்காசிய விவகாரங்களுக்கான அமெரிக்க துணைஅமைச்சர் றொபேர்ட் ஓ பிளேக் அண்மையில் புலம்பெயர் தமிழர்களின் பிரதிநிதிகளை அமெரிக்க தமிழ் அரசியல் செயலவை என்ற குடையின் கீழ் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார். அப்போது தமிழர் பிரதிநிதிகளுக்கு உருத்திரகுமாரனே தலை மைதாங்கி இருந்தார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இத்தகைய நிலையிலேயே உருத்திரகுமாரன் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்ற அழுத்தத்தை இலங்கை தொடங்கியுள்ளது.

பயங்கரவாதத்திற்கு ஆதரவளிக்கும், பயங்கரவாத அமைப்பு என வரையறுக்கப்பட்ட இயக்கம் ஒன்றின் உறுப்பினர் முழுமையான சட்ட நடவடிக்கைகளை எதிர்கொள்ள வேண்டும் என்பதை அமெரிக்க அரசு உறுதிப்படுத்த வேண்டும் என வெளிவிவகாரச் செயலாளர் பாலிதகோகன்ன தெரிவித்தார்.

(ந-5)

## சனல்-4 வீடியோச் காட்சி போலி...

என்ன என அவர் என்னிடம் வினவினார்.

இது போலியாகச் சித்திரிக்கப்பட்ட வீடியோக் காட்சி என்று அரசு உறுதிபடக் கூறுவதாக நான் அவரிடம் தெரிவித்தேன். வீடியோக் காட்சிகள் குறித்த அறிக்கை நாளை வெளியிடப்படும். ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனிடம் அறிக்கை கையளிக்கப் படும்.

இவை போன்ற குற்றச் சாட்டுக்கள் எமக்கு ஒன்றும் புதிதல்ல. பல சர்வதேச ஊடகங்கள் வன்னியில் இருந்த 4 மருத்துவர்களின் அறிக்கையை வைத்துக் கொண்டு இலங்கை இராணுவத்தினருக்கு எதிராக பல குற்றச்சாட்டுக்களை சுமத்தின. பொதுமக்க ளை இலக்குவைத்துத் தாக்கியதாகவும் வைத்தியசாலை மீது மோட்டார் தாக்குதல் நடத்தியதாகவும் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன.

விடுதலைப் புலிகளே எம்மை இவ்வாறு அறிக்கைகள் சமர்ப்பிக்குமாறு வற்புறுத்தியதாக அண்மையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் மருத்துவர் நால்வரும் பகிரங்கமாகத் தெரிவித்திருந்தனர்.

இதே போன்று கனடாவில் உள்ள மனித உரிமைகள் அமைப்புக்கள் இவை போன்ற வீடியோக் காட்சிகளை வெளியிட்டுப் பல குற்றச்சாட்டுகளைச் சுமத்தின. இதுவும் போலியானவை என நாம் உறுதிப்படுத்தினோம்.

மேற்படித் தொலைக்காட்சி தொடர்பிலான விசாரணைகளை டாக்டர் சுனில் ஹேற வித்தாரண (இவர் உலகளாவிய ரீதியில் பிரசித்தி பெற்ற வீடியோ பரிசோதகர்), மொறட்டுவை பல்கலைக் கழகத்தின் தலைமை தொழில்நுட்ப விரிவுரையாளர் சத்துர டி சில்வா, சிரேஷ்ட சமிக்ஞைகள் அதிகாரி பிரசாத் சமரசிங்க, மேஜர் ஜெனரல் பி.ஏ.பண்டார போன்றோர் நடத்தினர்.

அவர்களின் அறிக்கையில் இந்த வீடியோக் காட்சிகள் கேம் கோடர் மூலமாகவே ஒளிப்பதிவு செய்யப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கையடக்கத் தொலைபேசியில் அல்ல எனவும் தெரிவிக்கப்படுகிறது. மேலும் போலியான ஒலிப்பதிவு நவீன தொழில்நுட் பத்தின் மூலம் பதிவாக்கப்பட்டது எனவும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றார். (ந-5)


டயலொக் G.S.M நிறுவன அனுசரணையுடன் நடாத்தப்படும்
ஜனாதிபதி தங்கக் கோப்பை கரபந்தாட்ட சுற்றுப்போட்டி - 2009

யாழ்.மாவட்டத்தில் மேற்படி கரபந்தாட்டச் சுற்றுப் போட்டி ஆண், பெண் இருபாலாருக்கும் இம்மாத இறுதியில் நடைபெறவுள்ளது.

எனவே இச்சுற்றுப்போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் கழகங்கள், போட்டிக்கான விண்ணப்பப் படிவங்களை 186/26, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் உள்ள சங்கச் செயலாளரின் இல்லத்தில் பெற்று அதனைப் பூரணப்படுத்தி 16.09.2009 ஆம் திகதிக்கு முன்பு செயலாளரிடம் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

செயலாளர்
தொலைபேசி இல. 021 222 6723
யாழ்.மாவட்ட கரபந்தாட்ட சங்கம்.
(3388)



பாராட்டி வாழ்த்துகின்றோம்



சின்னத்தம்பி பாலேந்திரன்
(தபாலக ஊழியர், கரவெட்டி)

அல்வாய் வடக்கு இளங்கோ சனசமூக நிலையத்தில் முக்கிய பதவிகளை வகித்தவரும் இளங்கோ பொது நோக்கு மண்டபத்திற்கான காணியினை அன்பளிப்பாக வழங்கியவரும் அரசடி விநாயகர் ஆலய பரிபாலன சபைச் செயலாளரும் சமூக சேவையாளருமாகிய திரு.சி. பாலேந்திரன் அவர்கள் அரச சேவையிலிருந்து ஓய்வு பெறுகிறார்.

அகவை அறுபதில் இன்று (08.09.2009) காலடி எடுத்து வைக்கும் திரு.சி. பாலேந்திரன் அவர்கள் சமூகப்பணியில் தொடர்ந்தும் ஈடுபட்டு மகிழ்வுடன் வாழ பாராட்டி வாழ்த்துவதில் பெருமையடைகின்றோம்.

இளங்கோ சனசமூக நிலையம்
அல்வாய் வடக்கு.
(C-3265)

# இன்று ஒரு தகவல்

## கடவுளின் குரலும் சாத்தானின் குரலும்

கடலில் படகொன்று சென்று கொண்டிருந்தது. அதில் ஒரு சந்நியாசியும் இன்னும் சிலரும் பயணம் செய்து கொண்டிருந்தனர்.

அவர்கள் அனைவரும் அந்த சந்நியாசியை கிண்டல் செய்வது, கேலி செய்வது, அவர் மௌனமாக அமர்ந்திருக்கும் போது சத்தம்போடுவது என பல இடையூறுகளை செய்து கொண்டிருந்தனர்.

ஆனால் அதைப் பற்றி ஒன்றும் கவலைப்படாமல் பொறுமையாக வந்து கொண்டிருந்தார் அந்த சந்நியாசி.

மாலை சாய்ந்து இருள் சூழ ஆரம்பித்தது.

சந்நியாசி கண்ணைமூடி தியானத்தில் அமர்ந்திருந்தார்.

இதைப்பார்த்த ஒருவன், "டேய்... இப்பொழுது சாது தியானத்திலிருக்கிறார். இதுதான் நாம் வம்பு வளர்க்க சரியான நேரம்" என்று கூறினான்.

அதற்கு மற்றொருவன் "ஆமாம்" என்றான். உடனே எல்லோரும் சந்நியாசியை கிண்டல் செய்து கன்னாபின்னாவென்று பேச ஆரம்பித்தனர்.

ஆனால் பெரியவரின் கவனம் இவர்கள் மீது திரும்பவேயில்லை. கீழே கிடந்தவற்றையெல்லாம் எடுத்து அவர் மீது போட்டனர். அப்போதும் அவர் அசையவில்லை. ஒருவன் கீழே கிடந்த காலணியை எடுத்து அவரது தலையில் அடித்தான். அப்போதும் அவர் தியானத்திலேயே இருந்தார். அவரது முகம் அன்பாகவும் அமைதியாகவும் இருந்தது.

அப்பொழுது ஆகாயத்திலிருந்து ஒரு அசரீரி கேட்டது "என்னுடைய அன்புக்குரிய சாதுவே... நீ விரும்பினால் இந்தப் படகை நான் கவிழ்த்து விடுகிறேன்" என்று கூறியது.

அச்சமயத்தில் சாதுவின் தியானம் மெல்லக் கலையும் நிலையில் இருந்தது. அவரது கண்கள் மூடியபடியே இருந்தன. ஆனால் அவரைக் கேலி செய்தவர்களும் அடித்தவர்களும் பயந்தனர்.

"இந்த சாது, "சரி என்று ஒருவார்த்தை சொன்னால் போதும். இந்தப் படகையே கவிழ்த்து விடுகிறேன்! என்றெல்லவா இந்த அசரீரி சொல்கிறது. இவர் சரி என்று சொல்லி அதனால் படகு கவிழ்ந்து விடுமானால் நம் கதி என்னாகும் என்று யோசித்தார்கள்.

''விளையாட்டு வினையாகி விடுமே'' என்று நினைத்து மிகவும் பயந்து போய் விட்டார்கள். உடனே எல்லோரும் அந்தப் பெரியவரின் காலில் விழுந்து, ''ஐயா! எங்களை மன்னித்து விடுங்கள், ஏதோ தெரியாமல் தவறு செய்துவிட்டோம்" என்று பரிதாபமாக கெஞ்சினார்கள்.

சாதுவின் தியானம் முடிந்தது. மெதுவாகக் கண் திறந்து பார்த்தார். சுற்றிலும்... பயந்த முகத்துடன் மனிதர்கள். அவர்களின் உடம்பு நடுங்கிக் கொண்டிருந்தது. அவர்களை அமைதிப்படுத்திய சாது, ஆகாயத்தை பார்த்து கைகளை உயர்த்தினார்.

"என்னுடைய அன்பான கடவுளே! நீங்கள் சாத்தானின் மொழியில் ஏன் பேசுகிறீர்கள்? நீங்கள் கவிழ்த்து விளையாட வேண்டும் என்று நினைத்தால் அதற்காக படகைக் கவிழ்க்க வேண்டாம்.

நீங்கள் புரட்டித் திருப்ப வேண்டியது இந்தப் படகையல்ல... இந்த மனிதர்களின் புத்தியை! புத்தியைத் திருப்பாமல் படகைத் திருப்புவதில் பயனில்லை என்று வினவினார்.

உடனே ஆகாயத்திலிருந்த பதில் வந்தது.

"என் அன்புக்குரியவனே... நான் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன். நீ உண்மையைச் சரியாகப் புரிந்து கொண்டாய். சிறிது நேரத்திற்கு முன் ஒலித்தது எனது குரல் அல்ல. அது சாத்தானின் குரல். எவனொருவன் சாத்தானின் குரலைப் புரிந்து கொள்கிறானோ அவனே என் குரலையும் புரிந்து கொள்ள முடியும்!" என்று அந்தக் குரல் கூறியது.

யார் என்ன பேசினாலும் அது பிறருக்கு நன்மை தருவதாக இருந்தால் அதைக் கடவுளின் குரல் என்று நாமே எடுத்துக் கொள்ளலாம்.

பிறருக்குத் தீமை விளைவிக்கும் சொல்லும் செயலும் சாத்தானுக்கேயுரியது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*




மறைந்த தமிழ்த் தலைவர் அ. அமிர்தலிங்கத்தின் 82 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு லண்டனிலுள்ள இந்திய வை. எம்.சி.ஏ. மகாத்மா காந்தி நினைவு மண்டபத்தில் நடைபெற்ற நினைவுப் பேருரை நிகழ்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம், நிகழ்வில் கலந்து கொண்ட பிரமுகர் ஒருவர் ஆகியோர் உரையாற்றுவதையும் மேடையில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

# குடும்பநல உத்தியோகத்தர்களிற்கான ஆட்சேர்ப்பிற்கு மேலும் 31 பேர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சுகாதார அமைச்சினால் குடும்பநல உத்தியோகத்தர்களுக்கான அடிப்படைப் பயிற்சி நெறிக்கு புதிதாக மேலும் 31 மாணவர்கள் தகுதியின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான பயிற்சி நெறி தற்போது ஆரம்பமாகவுள்ளது.

தெரிவு செய்யப்பட்டவர்கள் அடையாள அட்டை, பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், கல்விச்சான்றிதழ் (மூலப் பிரதி), திருமணமாகாதவர் என கிராம சேவையாளரினால் உறுதிப் படுத் தப்பட்ட கடிதம் போன்ற ஆவணங்களுடன் நாளை புதன்கிழமை காலை 8 மணிக்கு யாழ்ப்பாணம் தாதியர் பயிற்சிக் கல்லூரிக்கு சமுகமளிக்குமாறு யாழ்.பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் கேட்டுக்கொள்கின்றார்.

தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் விபரம் வருமாறு,

சி.மேகலா (170, சாவகச்சேரி மகளிர் கல்லூர் நலன்புரி நிலையம்), மா.நிரஞ்சலா (கைதடி மேற்கு, கைதடி), சி.சகிலா( கோட்டைக்காடு, சுன்னாகம்), கோ.சிவசக்தி (அராலி தெற்கு, வட்டுக்கோட்டை), க.தர்சினி (வட்டுக் கோட்டை கிழக்கு), செ.தர்சிகா (கணபதியப்புலம் கோப்பாய் மத்தி),

கோ.றஜிதா (நீர்வேலி வடக்கு), க.துவாரகா (அராலி தெற்கு வட்டுக் கோட்டை).

வி.மேரிஜெனா ( 12ஆம் வட்டாரம், நெடுந்தீவுகிழக்கு), யோ. சிந்துகா (ஏழாலை மேற்கு, புளியம் கிணற்றடி, சுன்னாகம்), தே.கல்யாணி ( ஊ-8-11 றாமாவில்காம், கொடிகாமம்), ந.புகழினி ( கைதடி கிழக்கு), இ.மிரேமிலா (வத்திராயன் வடக்கு தாளையடி).

ச.நிரோஷா( தொட்டிலடி, சங்காணை), செ.சுவர்ணா(விளையாட்டரங்கு வீதி, கோப்பாய் தெற்கு), தெ. தர்சினி (புலோலி வடகிழக்கு, பருத்தித்துறை), பு.கஜனி (முருகன் கோவிலடி, சங்கரத்தை ,வட்டுக் கோட்டை).

ந.யாழினி -(விதானையார்வீதி, உரும்பிராய் வடக்கு) ,தே.மேனகா (இடைக்குறிச்சி,வரணி), பா.விதுப்பிரியா (கலம்பரை , கோப்பாய் வடக்கு).

த.நிருஜா - (உடுப்பிட்டி வீதி, தொண்டைமானாறு), கு.ஜீவகா - (28/6 கொண்டலடி வீதி ,நல்லூர், யாழ்ப்பாணம்).

ச.ரேணுகா(ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி கிழக்கு), இ.கௌதமி (261/ 6, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம்), சி.காயத்திரி(காரை நகர்), ரி.சாயிஜனனி (தாமரைக் குளத்தடி, துன்னாலை, பருத்தித் துறை).

கே.கிருஸ்ணவேணி (நெடுங் காடு, காரைநகர்) ,ஏ.எம். ஜெ. யூலியானா (போயிட்டி, அச்செழு), எஸ். கார்த்திகா (இல.240 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்), ஈ.கௌரிகா- (முருகமூர்த்தி வீதி, நெல்லியடி) கரவெட்டி. இ-கார்திகா. ஓ

# இராசி பலன்

*08.09.2009*
*(ஆவணி 23, செவ்வாய்க்கிழமை)*
*அச்சுவினி பின்னிரவு 5.06 மணிவரை*
*சதுர்த்தி முன்னிரவு 10.38 மணிவரை*
*அமிர்த சித்தம்*
*சங்கடஹர சதுர்த்தி*

| | |
|---|---|
| மேடம் | தெளிந்த சிந்தை, நல்ல முயற்சி, போசன சுகம், நண்பர்கள் சந்திப்பு. |
| இடபம் | காரிய அலைச்சல், கோபப்படுதல், தனவிரயம், பிரயாணம். |
| மிதுனம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், தனவரவு, தேகநலன், பெருமையடைதல். |
| கடகம் | செய்தொழில் விருத்தி, முயற்சி கைகூடும், பொருள் சேர்க்கை, அதிகாரம். |
| சிங்கம் | கட்டுப்பாடு, திடீர் பயணம், அதிக செலவு, முயற்சி தாமதம். |
| கன்னி | உடல் நலக்குறைவு, காரிய தாமதம், மரியாதைக்குறைவு, தனவிரயம். |
| துலாம் | காரிய சித்தி, குடும்ப சுகம், புதிய திருப்பம், நல்ல வரவேற்பு. |
| விருச்சிகம் | உடல்நலம், தடைப்பட்ட காரியம் கைகூடும், தனவருவாய், நண்பர்கள் உதவி. |
| தனுசு | அஜீரணக் கோளாறு, முயற்சி தாமதம், குடும்பக் கவலை, பணக் குறைவு. |
| மகரம் | நல்ல தகவல், நல்ல முயற்சி, தாய்வழி உறவு, வாக்கு மேன்மை. |
| கும்பம் | முயற்சி கைகூடும், பிரயாண நன்மை, கீர்த்தி, தெய்வ சிந்தை. |
| மீனம் | குடும்பக் கவலை, வேலைச் சுமை, தனவிரயம், போசன சுகக் குறைவு. |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் 1 Kg | திருநெல்வேலி ரூபா | யாழ்ப்பாணம் ரூபா | சாவகச்சேரி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 120 | 140 | 80 |
| உருளைக்கிழங்கு | 70 | 80 | 70 |
| ப்ச்சைமிளகாய் | 80 | 90 | 60 |
| தக்காளி | 30 | 40 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 50 |
| கோவா | 90 | 100 | -- |
| கரட் | 100 | 120 | 80 |
| பூசணி | 30 | 40 | 30 |
| புடோல் | 15 | 25 | 30 |
| வாழைக்காய் | 25 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 60 | 70 | 60 |
| பெரிய வெங்காயம் | 50 | 60 | 50 |
| பாகற்காய் | 50 | 40 | 40 |
| வெண்டிக்காய் | 30 | 40 | 30 |
| கரணைக் கிழங்கு | 40 | 50 | 50 |
| பயிற்றங்காய் | 40 | 50 | 30 |
| லீக்ஸ் | 50 | 60 | 80 |
| பீற்றூட் | 30 | 40 | 40 |
| கறிமிளகாய் | 40 | 60 | 60 |
| முருங்கைக்காய் | 100 | 120 | 80 |
| கீரை - 1 பிடி | 10 | 15 | 20 |
| தேசிக்காய் | 60 | 80 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 25 |

## குரு பூஜை

(யாழ்ப்பாணம்)

ஏழாலை ஆத்மஜோதி தியான மணிமண்டபத்தினரால் ஆத்மீக வள்ளல் ஆத்மஜோதி முத்தையாவின் குருபூஜையத் தினம்இன்று செவ்வாய்க்கிழமை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதனை முன்னிட்டு பாமாலை ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது. (ஓ-4)

## அதிபர்களுக்கான கூட்டமும் ஆசிரியர்களுக்கான நடமாடும் சேவையும்

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலயப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு வலயக் கல்வி அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகள், மாகாண கல்வித் திணைக்கள அதிகாரிகள் ஆகியோர் பங்குபற்றவுள்ளதால் சகல அதிபர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் கேட்டுக்கொள்கின்றார்.

அத்துடன் அன்றைய தினம் பிற்பகல் 1.30 மணிக்கு ஆசிரியர்களுக்கான குறைகேள் நடமாடும் சேவை நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் மாகாணக் கல்வித் திணைக்கள உயர் அதிகாரிகள் கலந்துகொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-4-29)

## மறவன்புலோ விவசாயிகள் பதிவுகளை மேற்கொள்ளவும்

(சாவகச்சேரி)

மறவன்புலோ விவசாய நிலங்களில் நெற் செய்கைக்கு அனுமதிக்கப்பட்ட வயற் சொந்தக்காரர் மற்றும் குத்தகைக்காரர்கள் நாளையும், நாளை மறுதினமும் கமநல சேவைத் திணைக்கள உதவி ஆணையாளரின் அறிவுறுத்தலுக்கமைய கைதடி கமநல சேவை நிலையத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு மறவன்புலோ விவசாய சம்மேளனத் தலைவர் சி. திருஞான சம்பந்தன் கேட்டுக்கொள்கின்றார். (ஓ-4-29)

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான மாணவர் ஒன்றியத்தினால் நடத்தப்படும் விளையாட்டு விஞ்ஞான அலகின் மெய்வல்லுநர் போட்டிகள் விஞ்ஞான அலகின் மாணவத் தலைவர் கே.துஷ்யந்தன் தலைமையில் நேற்று முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

இப்போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 6 மணி முதல் 7.30 மணி வரை ஆண்களுக்கான 10 ஆயிரம் மீற்றர் ஓட்டம் ஆண், பெண் இருபாலாருக்குமான நீளம் பாய்தல், 400மீற்றர் ஓட்டம் ஆகியன இடம்பெறவுள்ளன. இதில் 2 ஆம் வருட மாணவர்கள் பங்குபற்றவுள்ளனர்.

இதேவேளை அன்றைய தினம் மாலை 2மணிக்கு ஆண்களுக்கான எல்லே, கிளித்தட்டு போட்டியில் 1ஆம் வருட மாண வர்கள் 2ஆம் வருட மாணவர்களை எதிர்த்து மோதவுள்ளனர். (ஓ-4-14)

## முகாமைத்துவ உதவியாளர் நியமனம் பெற்றவர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையில் முகாமைத்து உதவியாளராக நியமனம் பெற்றவர்கள் சபையின் தலைமைக் காரியாலயங்களில் நாளை மறுநாள் வியாழக்கிழமை முதல் கடமையைப் பொறுப்பேற்குமாறு வடமாகாண பொது நிர்வாக சபையால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இவர்களிற்கான பயண ஒழுங்குகள் யாவும் யாழ்.அரசாங்க அதிபரினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளமையால் இவர்கள் நாளை புதன்கிழமை காலை பயண ஒழுங்குகளுடன் சிங்கள மகா வித்தியாலயத்திற்கு சமுகமளிக்குமாறு யாழ். பிராந்திய ஆணையாளர் கேட்டுக்கொள்கின்றார். (ஓ-4)

## முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தின் வழிகாட்டல் நிகழ்வும் விரிவுரையும் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

முகாமைத்துவ கற்கைநெறிக்கு 2008/2009 ஆம் கல்வியாண்டிற்கு அனுமதிக்கப்பட்ட புகுமுக மாணவர்களுக்கான வழிகாட்டல் நிகழ்வும் விரிவுரையும் நேற்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு முகாமைத்துவ மண்டபத்தில் பீடாதிபதி க.தேவராஜா தலைமையில் ஆரம்பமானது.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட பதிவாளர் காண்டீபன் ஆகியோரது வாழ்த்துரையுடன் ஆரம்பிக்கப்பட்ட இவ் வைபவத்தில் பல்துறை அறிஞர்கள் தொடர்ந்து உரையாற்ற இருப்பதுடன் ஆங்கிலம் சிறப்புக் கற்கைநெறியாகப் போதிக்கப்படும் என முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட பீடாதிபதி க.தேவராஜா அறிவித்துள்ளார். (ஓ)


### யாழ்.மாவட்டத்திலிருந்து

## 19 வயதுக்குட்பட்ட உதைபந்தாட்ட தேசிய அணிக்கு தெரிவு

(யாழ்ப்பாணம்)

2008 ஆம் ஆண்டு நடைபெற்ற தேசிய விளையாட்டுப் போட்டியில் 17 வயது உதைபந்தாட்ட அணியின் தலைவராக கடமையாற்றி தேசிய மட்டத்தில் 3 ஆம் இடத்தைப் பெற்ற மானிப்பாய் இந்துக்கல்லூரி மாணவன் செல்லத்துரை கனிஷ்டன் 19 வயதுக் குட்பட்ட உதைபந்தாட்ட தேசிய அணிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளான்.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 25 ஆம் திகதி ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெறவுள்ள போட்டிக்காக கொழும்பில் நடைபெறும் இறுதிப் பயிற்சிமுகாமில் பங்குபற்றவுள்ளார்.



கடந்த 30 வருடங்களின் பின் யாழ். மாவட்டத்திலிருந்து 19 வயதுக் குட்பட்ட உதைபந்தாட்ட தேசிய அணியில் இடம்பெற்றுள்ள இவ் வீரரை தெரிவுசெய்வதற்கான முயற்சிகளை யாழ். உதைபந்தாட்ட லீக் மேற்கொண்டதாக அதன் செயலாளர் தெரிவிக்கின்றார். (6)

## வடமாகாண விளையாட்டுப் போட்டி தொடர்பான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண விளையாட்டு திணைக் கழகத்தினால் நடத்தப்படவுள்ள வடமாகாண விளையாட்டுப்போட்டி தொடர்பான கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அரசாங்க அதிபர் தலைமையில் மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் யாழ்ப்பாணம் மாநகர சபை ஆணையாளர், யாழ்ப்பாண கமநல அபிவிருத்தி திணைக்கள உதவியாணையாளர், யாழ்ப்பாணம், நல்லூர், பருத்தித்துறை சாவகச்சேரி ,வேலணை ஆகிய பிரதேச செயலகங்களின் பிரதேசச் செயலாளர்கள், கரைநகர் உதவி அரசாங்க அதிபர், யாழ்ப்பாண கூட்டுறவு அபிவிருத்தி உதவியானையாளர், யாழ்ப்பாண கூட்டுறவு பனம்பொருள் அபிவிருத்தி உதவியாணை யாளர் மற்றும் யாழ்ப்பாண வணிகர் கழகத் தலைவர் ஆகியோரை தவறாதுகலந்து கொள்ளுமாறு யாழ். அரசாங்க அதிபர் கேட்டுக்கொள்கின்றார். (ஓ-9)

## கட்டட புனரமைப்புக்கு உதவுமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்திற்கு நிரந்தர கட்டடம் அமைப்பதற்கான அமைவிடம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.அந் நிலப் பரப்பில் உள்ள 3 மாடி கட்டடத்தை புனரமைப்பதற்கு 12 மில்லியன் நிதி தேவைப்படுவதால் இந் நிதியினை அரச, அரச சார்பற்ற நிறுவனங்களோ நலன்விரும்பிகளோ எவரும் சங்கத்தினருடன் தொடர்புகொண்டு செலுத்த முடியுமென விழிப்புலனற்றோர் சங்கத் தலைவர் ஆ.மகேந்திரன் தெரிவித்துள்ளார். (ஓ-4)

## வாகனப் பதிவுச் சான்றிதழ் சாரதி அனுமதிபத்திரம் கிடைக்கப் பெறாதோருக்கு

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி பிரதேச செயலகத்திற்குட்பட்ட அனைத்து மோட்டார் வாகன உடமைமாற்றம், சாரதி அனுமதிப்பத்திரம் தொடர்பாக 2008 ஆம் ஆண்டிற்கு முன்னர் விண்ணப்பித்து இதுவரை வாகன பதிவுச் சான்றிதழ், சாரதி அனுமதிப்பத்திரம் கிடைக்கப் பெறாதவர்கள் நாளை புதன்கிழமைக்கு முன்னர் பிரதேச செயலக மோட்டார் போக்குவரத்துப் பிரிவுடன் அவை தொடர்பான ஆவணங்களுடன் சமுகமளிக்கும்படி கரவெட்டி பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (ஓ)




## மீள் பரீட்சைக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

உயர்தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் 2009 ஆம் ஆண்டின் 2 ஆம் அரையாண்டுக்கான மீள் பரீட்சை விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

எனவே மாணவர்கள் எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் விண்ணப்பப்பத்திரங்களை சமர்ப்பிக்குமாறு யாழ்.உயர் தொழில்நுட்பவியல் நிறுவனப் பணிப்பாளர் எஸ்.ஜெ.எம்.சகாயன் தெரிவித்துள்ளார். (ஓ-4)

## கூட்டுறவு நகர் திறப்பு

(யாழ்ப்பாணம்)

கட்டைவேலி நெல்லியடி ப.நோ. கூட்டுறவுச் சங்கத்தின் துன்னாலை சிறிய திறப்பு கூட்டுறவு நகர் திறப்பு விழா நேற்று திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு சங்கத் தலைவர் சி.சிதம்பரநாதன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பொ.சிவலிங்கம் கலந்துகொண்டு நாடாவெட்டி திறந்துவைத்தார்.

அத்துடன் வியாபாரத்தை கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ.சங்க அபிவிருத்தி உத்தியோகத்தர் பொ.கோகுலன் ஆரம்பித்து வைத்தார். -(ஓ-4)









கலைவாணி கிட்ஸ்பார்க் நிறுவனத்தின் பரிசளிப்பு விழாவில் நிறுவன ஆசிரியர் திருமதி ஞ.கனகராஜா உரையாற்றுவதையும், மேடையில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.வலயக் கல்வி அலுவலக ஆங்கில ஆசிரிய ஆலோசகர் எஸ்.தயாபரன், நிறுவன இயக்குநர் சி.சிவரூபன், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட யூசிமாஸ் நிறுவன இயக்குநர் திருமதி ராதை பாஸ்கரன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும், விருந்தினர்களுடன் கலைவாணி கிட்ஸ்பார்க் நிறுவன ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் நிற்பதையும், மாணவர்களின் கலைநிகழ்வையும் படங்களில் காணலாம்.

# DISTRICT SECRETARIAT, JAFFNA
## INVITATION FOR BIDS
### VADDAKIN WASANTHAM DEVELOPMENT PROGRAMME -2009

| No. | Particulars | Requiered Nos. | Non Refundable Deposit (Rs) |
|---|---|---|---|
| 01 | Supply and Installation of Sprinkler Irrigation System | 577 units | 1000.00 |
| 02 | Supply and Installation of Drip Irrigation System | 195 units | 1000.00 |

1. The Government Agent, Jaffna invites sealed Bids from eligible and qualified bidders for the supply and installation of sprinkler Irrigation System and Drip Irrigation System for the selected beneficiaries.
2. Interested Bidders may obtain information from the office of the Deputy Director of Agri culture, Extension, Palaly Road, Jaffna on any working days from 9.00 am to 4.00 pm. Contact No 021 222 2175.
3. A complete set of bidding documents in English language may be obtained by interested Bidders from the Finance Branch of the office of the Deputy Director of Agriculture (Ext) from 08.09.2009 until 22.09.2009 between 9.00 am to 4.00 pm upon payment of non refundable fees of rupees Thousand (1,000.00) at the Finance Branch of the Office of the Deputy Director of Agriculture (Ext) or by submission of a Cheque in favour Deputy Director of Agriculture (Ext).
4. Bid shall be deposited in the Tender box or sent by under Registered Post to reach the District Planning Secretariat, District Secretariat, Jaffna on or before 22.09.2009.Late Bids willbe rejected.
5. Bids will be opened on 22.09.2009 at 4.00 p.m after closing in the Presence of Bidders or their authorized Representative at the, District Secretariat, Jaffna.
6. Duly filled and sealed Bids to be marked "Bids for Procurement of Supply and Installation of Sprinkler Irrigation System / Bids for Procurement of Supply and Installation of Drip Irrigation System" on the left hand corner of the envelop.

**K.Ganesh,**
**Government Agent/ District Secretary,**
**District Secretariat,Jaffna.**

(C-3261)

# சனல் -4 வீடியோக் காட்சிக்கு எதிராக லண்டனில் கண்டன ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

படையினரால் தமிழர்கள் படுகொலை செய்யப்படும் காட்சிகள் அடங்கிய வீடியோக்காட்சியை பிரித்தானியாவின் "சனல் -4" தொலைக்காட்சி வெளியிட்டதை ஏற்றுக் கொள்ள முடியாது எனக்கூறி சிங்களவர்கள் அந்த நிறுவனத்திற்கு எதிராக லண்டனில் நேற்று முன்தினம் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சனல் -4 நிறுவனம் ஒரு பொய்ச் செய்திச் சேவை என்று அவர்கள் குற்றம் சாட்டினர்.

தொலைக்காட்சி நிறுவனத்திற்கு எதிரான வாசகங்கள் அடங்கிய பதாகைகளையும் அவர்கள் தாங்கி இருந்தனர். "சனல்-4" நிறுவனம் மன்னிப்புக்கோரவேண்டும்.மில்லர் என்றால் திரிவுபடுத்தப்பட்ட செய்திகள் என்று அர்த்தம்.

சனல் -4 ஒளிபரப்பு வெட்கக்கேடான பொய், இனிமேல் நாம் எப்படி சனல் -4 செய்திகளை நம்புவது, சனல்-4 இன் பிந்திய செய்திகள் கோமாளி நாடகம் போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை அவர்கள் தாங்கியிருந்தனர்.

சனல் -4 நிறுவனம் அண்மையில் வெளியிட்ட வீடியோக் காட்சிகள் விசாரணைகள் இன்றி மரண தண்டனை விதிக்கப்படும் பாணியில் சிங்களச் சிப்பாய்களால் தமிழர்கள் படுகொலை செய்யப் படும் காட்சிகள் அப்பட்டமாகப் பதிவாகி இருந்தன.

இந்த வீடியோக் காட்சியை ஜனநாயகத்திற்கான ஊடகவியலாளர்கள் அமைப்பு வெளியிட்டிருந்ததாக சனல் 4 நிறுவனம் தெரிவித்திருந்தது.

கண்களும் கைகளும் கட்டப்பட்ட நிலையில் ஆடைகள் களையப்பட்ட 10 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட காட்சிகள் அந்த வீடியோவில் பதிவாகி இருந்தன. முக்கிய அனைத்துலக ஊடகங்கள் அனைத்திலும்அந்த வீடியோக் காட்சி ஒளிபரப்பாகியது.

இந்த வீடியோக்காட்சி குறித்து அனைத்துலக விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் எனப் பல்வேறு மட்டங்களிலும் இருந்து அழுத்தங்கள் வழங்கப்பட்டு வருகின்ற நிலையில் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளதெனக் குறிப்பிடப்பட்டுள்ளன. (ஓ-5)

# உலக மக்களைக் கவர்ந்த ஒபாமா
## அடிமைச்சந்தையிலிருந்து வெள்ளை மாளிகை வரை

122



முழுமூச்சுடன் களத்தில் குதித்தார். நாளொன்றுக்கு ஐந்து மணித்தியாலங்களுக்கதிகமாகப் பிரசாரப் பயணங்களை மேற்கொண்டார். வட்டாரம் வட்டாரமாக நகர்ப்புறம், நாட்டுப்புறம், மாவட்டங்கள் என்று நான்கு திசைகளிலும் சூறாவளிப் பிரசாரம் நடந்தது.

இலினோயிஸின் ஜனநாயகக் கட்சியின் இயந்திரம் உதவிக்கு இன்னும் வரவில்லை. ஆயினும் தன் குறைந்த வளங்களைப் பயன்படுத்தி பாடுபட்டார். ஐந்து அல்லது ஐம்பது பேர்களிருந்தாலும், வசதி படைத்தவர்கள் அல்லது வறியவர்கள், நட்புக்கரம் நீட்டுபவர்கள் அல்லது முகத்தைச் சுழிப்பவர்கள், ஆர்வலர் என்று இன்னோரன்னவர்கள் எனப் பேதம் பாராட்டாது அவர்கள் கூறுவதைக் கவனமாகக் கேட்டார்.

அவர்கள் தங்கள் தொழில், வர்த் தகம், அருகிலுள்ள பாடசாலை, பள்ளியின் மேல் அவர்கள் கொட்டித் தீர்த்த கோபம், ஜனநாயகக் கட்சி மேல் அவர்கள் சுமத்திய பழி, தங்கள் நோய்கள் பற்றிக் கூறியவை, தங்களுக்கு இருக்கும் முதுகுவலி, யுத்தத்திற்கு தாங்கள் ஆற்றிய சேவை என்று பல விடயங்கள் பற்றி ஒபாமாவுடன் பேசினார் கள்.

ஆனால் பெரும்பாலானோர் தாங்களுண்டு தங்கள் வேலையுண்டு என்றிருந்தார்கள். அரசியலில் அவர்களுக்கு எந்த அக்கறையுமில்லாதது போன்றிருந்தது. அதைவிடுத்து தங்கள் அன்றாடப் பிரச்சினைகள்அவர் கள் எண்ணங்களில் ஆதிக்கம் செலுத்தின. தங்கள் குழந்தைகள், அருகில் மூடப்பட்டுள்ள தொழிற்சாலையும் இழந்த வாய்ப்புகளும் விஷம் போல் ஏறும் காஸ் விலை, நேர்சிங்ஹோமில் படுக்கையாகக் கிடக்கும் தாய் அல்லது தந்தை பற்றியவையாகவே இருந் தன.

ஒபாமா மக்களின் பிரச்சினைகளை நன்கு அறிந்து கொண்டார். அவர்களுக்கு வேண்டியதெல்லாம் மிக எளிமையான தேவைகள் தான். இந்த இலகுவான எளிமை வாய்ந்த நம்பிக்கை இனம், மதம், மாகாணம், மாநிலம், வகுப்பு என்ற பிரிவினைகளைக் கடந்து ஒன்றுபட்டு நின்றதைக் கண்டார். அவர்களின் விருப்பு வெறுப்புக்கள் ஒரே மாதிரியானவையாகவே இருந்தன.

எவராவது கடுமையாக உழைக்க முன்வந்தால் நிச்சயம் வேலைவாய்ப்பு இருக்கும், கிடைக்கும் என்று நம்பினர். ஒவ்வொரு குழந்தைக்கும் அடிப்படைக் கல்வி கிடைக்க வேண்டும்.அவர்கள் தொடர்ந்து கல்லூரிக்குச் செல்ல வேண்டும்.ஒவ்வொரு குடும்பமும் பயங்கரவாதம், குற்றவாளிகளிடமிருந்து பாதுகாக்கப்பட வேண்டும் என்று விரும்பினர்.

நல்ல காற்றோட்டம், குடிநீர், தங்கள் குழந்தைகளோடிருக்க விடுவிப்பு, வயோதிபம் வந்ததும் இளைப்பாறி சுயகௌரவம், சுயமரியாதையோடு வாழ வழிவேண்டும். இவற்றையடைய தங்கள் முயற்சிகளை ஆற்றுப்படுத்தி உதவ அரசாங்கம் முன்வர வேண்டும்.தாங்கள் செலுத்தும் வரிப் பணம் வீணடிக்கப்படாது பயன்படவேண்டும். இவை கள் தான் அவர்கள் விரும்பும் குறைந்தபட்ச வசதிகள்.

ஒபாமா அவர்களின் பிரச்சினை களை அமைதியாக செவிமடுத்தார். அரசுகள் அவர்களின் எல்லாப் பிரச்சினைகளையும் தீர்க்க முடியாது.ஆயினும் முன்னுரிமைகளில் சிறிய மாற் றங்களை ஏற்படுத்துவதன் மூலம் மக்களின் சவால்களை எதிர்கொள்ள நாடு என்ற குடையின் கீழ் எல்லோரும் ஒருமைப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

அப்படியாயின் எப்படி தாங்கள் அதில் பங்காற்ற முடியும் என்று விசாரித்தார்கள். அந்தப் பணியை மேற்கொள்ளத்தான் ஒபாமா அரசியலில் புகுந்தார். இன்னும் அதிகமாகப் பாடுபட்டுழைக்க தன்னை தயார்படுத்தினார்.

தனது அரசியல் கனவுகளை உள்ளடக்கிய நூலொன்றை 2006 இல் வெளியிட்டார். அதன் பெயர் , ''நம்பிக்கையின் துணிச்சல்' (Audacity of Hope). இதற்கு முன் 1995 இல் தனது சுயசரிதையான "எனது தந்தை யின் கனவுகளிலிருந்து" என்ற நூலை வெளியிட்டார். இவ்விரு புத்தகங்களும் ஒபா மாவுக்கு பெரும் புகழையும் பணத்தையும் ஈட்டிக் கொடுத்தன.

இந்த சுயசரிதையைப் பற்றி பிரசித்தி பெற்ற "ரைம்" (Times) சஞ்சிகை பின்வருமாறு விமர்சித்தது.

என்னதான் மக்கள் ஒரு அரசியல்வாதியிடமிருந்து எதிர்பார்த்தாலும், அது சத்தியத்தில் ஊறிய தன் கதையை அழகாக எழுதி வெளிவர வேண்டும் என்று யாரும் எண்ணியிருக்க முடியாது.ஆனால் இதோ பரக் ஒபாமா அப்படியொன்றை எழுதியுள்ளார் என்று புகழாரம் சூட்டியது.

(The Audacity of Hope) அதாவது ''நம்பிக்கையின் துணிச்சல்'' என்ற நூல் பற்றி ஆங்கில வார ஏடு பின்வருமாறு ஆரூடம் கூறியது.

### ஜம்பொன்

அதிகம் விற்பனையாகும் இந்த நூலில் பரக் ஒபாமா அரசியலில் கட்சி, இனம், நிறம் என்ற வேறுபாடுகளின்றி எல்லோரையும் ஒன்றுபடுத்திப் பார்ப்பது, மற்றையவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பது ஆகியவற்றின் முக்கியத்துவத்தை விபரிக்கிறார். புதிய அமெரிக்காவில் புதிய கொள்கைகள் பற்றி அலசுகிறார்.

அதன் ஜனநாயகக் கோட்பாட்டின் இலட்சியங்களை எப்படி முன்னெடுக்க முடியும் என்று விவாதிக்கிறார். ஒரு செனட்டராகவும், வழக்கறிஞராகவும், பேராசிரியராகவும் , ஒரு தந்தையாகவும் , ஒரு கிறிஸ்தவராகவும் விளங்கும் ஒபாமா மன மாற்றம் செய்ய வல்ல சக்தியுடைய நூல் ஒன்றை எழுதியுள்ளார். அது உலக மக்களை ஊக்கமூட்டும் என்பது நிச்சயம்'' என்று முடிக்கிறது கார்டியன் பத்திரிகை.

(தொடரும்)

# எழுத்தறிவின்மையை இல்லாதொழிப்போம்

இன்றைய உலகின் ஒன்றுக்கொன்று தொடர்புடைய, ஒன்றில் இருந்து ஒன்றைப் பிரிக்க முடியாத மனித உரிமைகள் பற்றிய கோட்பாடுகளில் அவசியம் உணரப்பட்டு வருவதுடன் அவை பற்றிய விழிப்புணர்வினை சமூக மட்டத்தில் வலியுறுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

சமூக, பொருளாதார, பண்பாட்டு உரிமைகள், குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள், ஆரோக்கியமான சுற்றுப்புறச் சூழலுக்கான உரிமை மனிதாபிமான மற்றும் நிலைபெற்ற மேம்பாட்டுக்கான உரிமை, எதிர்காலத் தலைமுறைகளுக்கான உரிமைகள் என்ற வகையில் மனித உரிமைகள் கோட்பாடானது விரிவடைந்திருக்கின்றது.

## இன்று சர்வதேச எழுத்தறிவு தினம்

அந்த வகையில் இவற்றில் உள்ளடங்கிய கல்வி கற்கும் உரிமை என்பது முக்கியமான விடயமாகும். இது தனி மனிதன் ஒருவனின் பிறப்புரிமையுமாகும். உலகில் வாழும் ஒவ்வொரு மனிதனும் குறைந்த பட்சம் தாய் மொழியில் எழுதவும், வாசிக்கவும் இயலுமான அடிப்படைத் தகைமையை கொண்டிருக்க வேண்டும் என்பதையே இத்தினம் எமக்கு உணர்த்தி நிற்கின்றது. அதாவது இத்தினம் எழுத்தறிவின்மையை போக்குவதற்கான போராட்டத்தின் அவசியத்தினை ஒவ்வொருவருக்கும் உணர்த்துகின்ற வகையில் கவனயீர்ப்பினைப்பெற்றுள்ளது எனலாம்.

அத்துடன் எழுத்தறிவின்மையை ஒலிப்பதில் இதுவரை காணப்பட்டிருக்கும் முன்னேற்றத்தினை பகுப்பாய்வு செய்து, பின்தங்கியுள்ள மக்களின் எழுத்தறிவை மேம்படுத்துவதற்கு தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட வேண்டிய வினைத்திறனுள்ள மூலோபாயங்கள் மீது உலகின் கவனத்தை மையம் கொள்ள வைப்பதற்கு ஓர் உன்னதமான வாய்ப்பினை இன்றைய தினம் வழங்குகின்றது.


ஆண்டு தோறும் செப்ரெம்பர் 8ஆம் திகதியை சர்வதேச எழுத்தறிவு தினமாக அனுஷ்டிக்கும் தீர்மானத்தினை 1965ஆம் ஆண்டின் இறுதியில் ஐக்கிய நாடுகள் சபையில் கல்வி, அறிவியல், கலாசார நிறுவனமான யுனஸ்கோ உலகிற்கு பிர்கடனம் செய்தது. இதன் பிரகாரம் 1966ஆம் ஆண்டு முதல் இத் தினம் சர்வதேச ரீதியில் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. இதனை வலியுறுத்துவதற்காகவே 1990ஆம் ஆண்டினை சர்வ தேச எழுத்தறிவு ஆண்டாக ஐக்கிய நாடுகள் சபை பிரகடனப்படுத்தியது.

உலக எழுத்தறிவு நிலைபரம் தொடர்பாக யுனிகோவினால் வெளியிடப்பட்டிருக்கும் தகவல்களின் படி இன்று உலக மக்களில் வயது வந்தோரில் நூறுகோடி மக்கள் எழுத்தறிவுற்றவர்களாகவுள்ளனர். இவர்களில் 3 இல் இரண்டு பங்கினர் பெண்கள் என்பது கவனிக்கத்தக்கது.

மு.இராசநாயகம்
உதவிக் கல்விப்பணிப்பாளர்
[முறைசாராக்கல்வி] யாழ்ப்பாண வலயம்.

அத்துடன் முழு உலகிலும் பத்துக் கோடிக்கு மேலான சிறார்கள் கல்வி வாய்ப்பினைப்பெற முடியாது கல்வி உலகில் இருந்து விலகியுள்ளனர். அதிலும் 7 கோடி 50 இலட்சம் சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்வதில்லை. இந்த எண்ணிக்கையை விடக் கூடுதலானவர்கள் பாடசாலைகளில் ஒழுங்கற்ற வரவினை கொண்டுள்ளனர் என்ற அதிர்வூட்டும் தகவல்கள் வெளிவந்துள்ளது.

இத் தகவல்களை எழுத்தறிவின்மை என்பது வறுமையின் விளைவு என்பதை புலப்படுத்துகின்றது.



எனவே வறுமையின் பிடியில் சிக்கியுள்ளோரை கல்வி நடவடிக்கைகளில் உள்ளீர்ப்பதற்கான வினைத்திறனான கல்விச் செயற்பாடுகள் அவசியமாகிறது. தரமான கல்வியில் மேம்பாட்டிற்கு எழுத்தறிவே நாற் றங்காலாக அமைய வேண்டியுள்ளது.

சர்வதேச எழுத்தறிவு தினத்தினை இலங்கையில் கொண்டாடும் முகமாக 2.09.2009 முதல் 8.09.2009 வரையான காலப்பகுதியில் எழுத்தறிவு வாரமாக கல்வி அமைச்சினால் பிரகடனம் செய்யப்பட்டுள் ளது.

இத்தினத்தையொட்டிய பல்வேறு வேலைத் திட்டங்கள் வலய மட்டத்தில் முறை சாராக் கல்விப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் கட்டாயக்கல்வி (5-14 வயது) வயதுப்பிரிவினரில் பாடசாலை செல்லாத இடை விலகிய பிள்ளைகளே இனங்கண்டு அவர்களை பாடசாலையில் இணைத்தல் பெற்றோர் மத்தியில் கல்வி அறிவு பற்றிய விழிப்புணர்வுக்கருத்தரங்குகளை நடத்துதல் எழுத்தறிவில்லாத பெற்றோருக்கு முதியோர் கல்வி மூலம் எழுத வாசிக்க கற்றுக் கொடுத்தல், சமூக கற்றல் நிலையத்தில் செயற்பாடுகளை வலுப்படுத்தும் வகையில் அறிவூட்டல், செயற்பாடுகளை ஒழுங்கமைத்தல் போன்ற வேலைத்திட்டங்களின் ஊடாக எழுத்தறிவு பற்றிய விழிப்பு சமூக மட்டத்தில் ஏற்படுத்தப்பட்டுவருகிறது.


இதன் மூலம் எமது பிரதேசத்தில் எழுத்தறி வின்மையை இல்லாதொழித்து ஆரோக்கியமான சமூதாயம் ஒன்றினை கட்டியெழுப்புவதற்கு இத் தினத்தில் உறுதி பூணுவோம்.

# யாழ்ப்பாணத்தில் தனது சேவையை ஆரம்பிக்கும் பஜாஜ் நிறுவனம்



டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டெட் (DPMC) நிறுவனமானது. பஜாஜ் மோட்டார் சைக்கிள் மற்றும் பஜாஜ் முச்சக்கர வண்டிகளின் இலங்கையின் ஏக விற்பனை முகவராகும்.

இதன் முதலாவது விற்பனைக் காரியாலயத்தை யாழ்ப்பாணத்தில் திறக்கவுள்ளது. இதன் மூலம் இப்பிராந்தியத்தின் பஜாஜ் வாடிக்



கையாளர்களின் தேவைகளை இலகு வில் நிறைவேற்றவுள்ளது.

பஜாஜ் மோட்டார் சைக்கிளானது இலங்கையில் அதிசிறந்த சுகந்தலா விற்பனையாகும். வாகனமாகும். அத்துடன் பஜாஜ் முச்சக்கர வண்டியானது இந் நாட்டின் முதல் தர குடும்பவாகனமாகும். யாழ்ப்பாணத்தில் ஏற்கனவே பஜாஜ் வாகனங்கள் உள்ளது. ஆயினும் முதல் தடவையாக D.P.M.C நிறுவனம் யாழ். பிராந்தியத்தில் நேரடியாக தனது வியாபார செயல்பாடுகளை ஆரம்பித்துள்ளது.

இதன் புதிய விற்பனைக் காரியாலயம் நாளை மறுநாள் புதன்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது. இதன் மூலம் யாழ் மக்களுக்கு எரிபொருள் சிக்கன முடைய செலவு குறைந்த மற்றும் வசதியான போக்குவரத்து வாகனத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். இது நாளாந்த தேவைகளுக்கு மிகவும் சிறப்பானதொன்றாகும்.

முச்சக்கர வண்டித் தொழிலானது, இளம் பரம்பரைக்கு ஒரு சுய தொழில் வாய்ப்பாகவும் அமைகிறது. மற்றும் சில குடும்பங்கள்

விளம்பர விவரணம்

இதன் வருமானத்தில் தங்கியிருக்கின்றன. குறிப்பிட்ட நபர்கள் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டு விற்பனை முகவராக நியமிக்கப்பட்டுள்ளனர். மேலதிக செயற்பாடுகள் விற்பனைக் காரியாலயத்தின் ஊடாக நடைபெறும் நிறுவனமானது இப்பிராந்தியத்தின் சேவை முகவர் மற்றும் உதிரிப்பாக விற்பனை முகவர்களின் வலைப்பின்னலை அதிகரித்து தனது எல்லையை விரிவாக்கவுள்ளது.

அத்துடன் யாழ்ப்பாண வாடிக்கையாளர்களுக்கு நம்ப முடியாத அளவு விற் பனைக்கு பிந்திய சேவையை வழங்க முன் வரவுள்ளது.

மேலும் DPMC நிறுவனம் தொழில் நுட்ப பயிற் சிகளையும் வழங்கவுள்ளது.

அதன்படி பஜாஜ் மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கரவண்டியின் திருத்த வேலை மற்றும் பராமரிப்பு முறைகள் பற்றி யாழ்ப்பாணம் தொழில் பயிற்சி அதிகாரசபைக்கு உட்பட்ட ஆசிரியர்களுக்கான பயிற்சிகளை பண்டாரகமவில் அமைந்துள்ள நிறுவனத்தின் தொழில் நுட்ப கலைக்கூடத்தில் வழங்கவுள்ளது. பயிற்சியின் பின் அவர்கள் மீண்டும் யாழ்ப்பாணம் வந்து தமது பிரதேசத்தில் உள்ள வேலை அற்ற இளைஞர்கள் மற்றும் பாடசாலையில் இருந்து வெளியேறிய மாணவர்கள் ஆகியோருக்கு பயிற்சிகளை வழங்குவதன் மூலம் பஜாஜ் மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டிகள் திருத்தியமைக்கும் நிலையங்கள் மற்றும் பராமரிப்பு சேவை நிலையங்களை யாழ். பிராந்தியம் முழுவதும் நிறுவ முடியும்.

இதன் மூலம் இளைஞர்களுக்கு நல்ல வேலைவாய்ப்பும் அத்துடன் விற்பனைக்கு பிந்திய நல்ல சேவையும் வாடிக்கையாளர்களுக்கு வழங்க முடியும்.

# யுத்தத்தினால் தாக்கங்களுக்குள்ளான சிறுவர்கள் குறித்து யுனிசெப் கவலை

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக தாக்கங்களுக்குள்ளான சிறுவர்கள் குறித்து பெரும் கவலை கொண்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் தெரிவித்துள்ளது.

வவுனியா இடம்பெயர்ந்தோர் முகாம்களில் சிறுவர்களுக்கு விசே டமாக குடும்பங்களிலிருந்து பிரிந்திருக்கும் குழந்தைகள் அல்லது அலட்சியம், துஷ்பிரயோகம், வஞ்சித்தல் போன்ற இடர்களுக்கு உட்பட்ட குழந்தைகள் போன்றோ ருக்கு பாதுகாப்பு அளிப்பதில் யுனிசெப் ஈடுபட்டுள்ளது என்று யுனிசெப் ஆணையாளர் ஆன்வெனெ மன் தெரிவித்தார்.

இலங்கையில் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள இடம்பெயர் ந்த மக்களுக்கு பாதுகாப்பான குடிநீர், சுகாதார வசதிகள், நோய்த் தடுப்பு மருந்து, போஷாக்கு உணவு கள் ஆகியன உட்பட மனிதநேய உதவி மேலும், இலங்கை முழுவதி லும் சிறுவர்களுக்கான சுகாதார, கல்வி, பாதுகாப்பு திட்டங்களுக்கும் யுனிசெப் உதவியளித்து வருகிறது என்று ஆன்வெ னெமன் தெரிவித்தார். (ஓ-6)

# தங்கூசி நூல் கழுத்தில் சிக்குண்டு 11 வயதுச் சிறுவன் உயிரிழப்பு

## கெக்கிராவ பகுதியில் சம்பவம்

(கொழும்பு)

தங்கூசிநூல்கழுத்தில் சிக்குண்டு சிறுவன் ஒருவன்பரிதாபமாக உயிரிழந் துள்ளான். இச்சம்பவம் க்டந்த சனிக்கிழமை மாலை அனுராதபுரம் கெக்கிராவ திப்பட்டுவாவஎன்ற கிராமபகுதியில் இடம்பெற்றுள்ளது. இதன் போது 11வயதுடைய சிறுவன் ஒருவனே உயிரிழந்து ளான் .சம்பவம்தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, குறித்ததினம் இரு சிறுவர்கள் வீட்டு முற்றத்தில் தங்கூசிநூல்களை கொண்டு விளையாடிக் கொண்டிருந் துள்ளனர். இதன்போது எதிர்பாராத விதமாக ஒரு சிறுவனின் கழுத்தில் மேற்படிதங் கூசிநூல் பலவாறாகசிக்கியுள்ளது. இதனைப் பிரித்தெடுக்க முற்பட்ட போதும் முடியாதநிலையில் களுத்து இறுகி சிறுவன் உயிரிழந் துள்ளான். இம்மரணம்தொடர்பான விசாரணைகள்நேற்றுமுன்தினம் மாலை இடம் பெற்றன. விசாரணைகளைகெக்கிராவ பொலிஸார்மேற்கொண்டுவருகின்றனர் .(ஓ-6)



குடும்பநல உத்தியோகத்தருக்கு பயிற்சி வழங்கும் ஆரம்ப நிகழ்வு பண்ணை பிராந்திய பயிற்சி நிலையத்தில் நேற்று (07.09.2009) இடம்பெற்றது. இந்நிகழ்வில் யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி இ.தேவநேசன் மங்கல விளக்கேற்றுவதையும், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன், வடமாகாண சுகாதர சேவைகள் பணிப்பாளர் ஏ.ஈ.ஞானசோதி, மத்திய சுகாதார அமைச்சின் பொதுச் சுகாதார சேவைகளுக்கான பிரதிப் பணிப்பாளர் நாயகம் வைத்திய கலாநிதி பி.ஜி.மகிபாலா ஆகியோர் உரையாற்றுவதையும், நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு தொகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:-அலுவலக செய்தியாளர்)

# நாட்டின் கால நிலை குறித்து கவனத்துடன் செயற்படவேண்டும்

## மீனவர்களுக்கு வானிலை அவதான நிலையம் எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டில் தற்போது காற்றின் வேகம் சற்று அதிகரித்துள்ளதால் கிழக்கு, தென்கிழக்கு, மற்றும் மன்னார்க் குடா கடற்பரப்புக்களில் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள் மிகுந்த கவனத்துடன் செயற்பட வேண்டுமென வானிலை அவதான நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

சீன கடற்பரப்பில் உருவாக்கியுள்ள சூறாவளி காரணமாகவே இலங்கையில் காற்றின் வேகம் அதிகரித்திருப்பதாக வானிலை அவதான நிலையத்தின் வானிலையாளர் சமிந்த டி சில்வா தெரிவித்தார்.

சீனாவுக்கு அருகில் கடற்பரப்பில் சூறாவளி ஏற்பட்டிருக்கின்றது. இதன் காரணத்தினால் இந்த நாட்களில் இலங்கைக்கு தென்மேற்காக காற்று வீசுகின்றது. மணித்தியாலத்திற்கு 40 -50 கிலோமீற்றர் வேகத்தில் வீசுகின்ற காற்றின் வேகம் சில சமயம் 60 -70 கிலோ மீற்றர் வரையும் அதிகரிக்கக் கூடும்.

அதனால் கிழக்கு, தென்கிழக்கு மற்றும் மன்னார் குடாவில் மீன்பிடிப்பவர்கள் மிகுந்த முன்னெச்சரிக்கையோடு நடந்துகொள்ள வேண்டும். இந்த நிலைமை அடுத்து வரும் இரண்டொரு தினங்களுக்கு நீடிக்க முடியும் என மேலும் தெரிவித்தார். (ஓ-6)

# அரசாங்கத்தின் புகழ்பாடுகின்றவர்கள் பிச்சைக்காரர்களுக்கு ஒப்பானவர்கள்

## ஜே.வி.பி தெரிவிப்பு

(கொழும்பு)

ஆரம்பக் கொள்கைகளை மறந்து தமது சுய இலாபத்திற்காக அரசாங்கத்துடன் ஒட்டிக்கொண்டு புகழாரம் பாடுபவர்கள் உண்மையிலேயே பஸ்களில் ஏறி சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு பிச்சை எடுப்பவர்களுக்கு ஒப்பானவர்கள் என்று ஜே.வி. பியின் பாராளுமன்றக் குழுத் தலைவர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இன்று புகழாரம் பாடுபவர்கள் நாளை அரசியல் அநாதைகளாகவும் அரசியல் கோமாளிகளாகவுமே மாறப் போகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஜே.வி.பியின் விசேட செய்தியாளர் மாநாடு கடந்த ஞாயிற்றுக்கிழமை பத்ரமுல்லையில் அமைந்துள்ள கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற போதே பாராளுமன்றக் குழுத் தலைவர் அநுரகுமார திசாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார். (ஓ-6)

# புதுக்குடியிருப்புப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த பிரதான நகரங்களின் வரைபடங்கள் கண்டெடுப்பு

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 422 வரைபடங்களை பாதுகாப்பு படையினர் கண்டெடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நாட்டின் பல பிரதான நகரங்களின் வரைபடங்கள் அவற்றுள் அடங்கியுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கொழும்பு, நீர்கொழும்பு, குருநாகல், அம்பாந்தோட்டை, புத்தளம், களுத்துறை, மாத்தளை, மொனராகலை, கண்டி, கம்பஹா, பொலநறுவை மற்றும் அம்பாறை ஆகிய பகுதிகளின் வரைபடங்கள் அவற்றில் அடங்குவதாகவும் விடுதலைப்புலிகளின் செயற்பாடுகளுக்காக கடந்த காலங்களில் இவை மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் எனவும் இராணுவப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஓ-9)

## சனல் 4 விவகாரம் தொடர்பில்

# அரச உயரதிகாரியொருவர் விரைவில் லண்டன் விஜயம்

(கொழும்பு)

சனல் -4 ஊடக நிறுவனம் அண்மையில் வெளியிட்ட வீடியோக் காட்சி தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் நோக்கில் உயரதிகாரி ஒருவர் லண்டனுக்கு விஜயம் செய்யவுள்ளதாக இணையத் தளச் செய்தி ஒன்று தெரிவித்துள்ளது.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,


இலங்கை இராணுவத்திற்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் நோக்கில் சனல் -4 ஊடகம் போலியான வீடியோக் காட்சி ஒன்றை வெளியிட்டுள்ளதாக அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

இந்த விடயம் குறித்து நடவடிக்கை எடுக்கும் நோக்கில் அரசாங்கத்தின் உயர் அதிகாரி ஒருவர் பிரித்தானியாவுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு எதிராக பிரசாரம் செய்யும் சக்திகள் தொடர்பில் பிரித்தானிய அர்சாங்கத்திற்குக் குறித்த அதிகாரி தெளிவுபடுத்தவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் நோக்கில் முன்னெடுக்கப்படும் போலிப் பிரசாரங்களைத் தடுப்பதற்கு சர்வதேச காவல்துறையினரின் ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ளப்படவுள்ளதாக தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் லக்ஷ்மன் ஹுலுகல்ல தெரிவித்துள்ளார் என்றும் கூறப்பட்டுள்ளது. (ஓ-6)

# புலிகளின் முக்கிய உறுப்பினர்களின் இறப்புச் சான்றிதழ் வழங்க தயக்கம்



(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் உளவுப்படை தலைவர் பொட்டு அம்மான், கடற்புலிகளின் தலைவர் சூசை ஆகியோரையும் கொன்றுவிட்டதாக இலங்கை இராணுவம் அறிவித்தது.

இதில் பிரபாகரன் உடல் காண்பிக்கப்பட்டது. எனினும் பொட்டுஅம்மான், சூசை ஆகியோரின் உடல்கள் காண்பிக்கப்படவில்லை. ராஜீவ்காந்தி கொலை வழக்கில் பிரபாகரன், பொட்டுஅம்மான் ஆகியோர் முக்கிய குற்றவாளிகளாக சேர்க்கப்பட்டிருந்தனர்.

எனவே அவர்களின் இறப்பு சான்றிதழ் தருமாறு இந்தியா இலங்கையிடம் கேட்டது . ஆனால் இலங்கை அரசு இதுவரை இறப்பு சான்றிதழை வழங்கவில்லை.

மே 17 ஆம் திகதி நடந்த இறுதிக் கட்ட யுத்தத்தின்போது பொட்டு அம்மானும் சூசையும் நந்திக் கடல் வழியாக தப்பிவிட்டதாகவும் அவர்கள் உயிரோடு இருப்பதாகவும் இலங்கை அரசு வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனவேதான் இறப்பு சான்றிதழை வழங்க மறுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-6)




அரியாலை நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தான முன்னாள் பிரதம குருக்கள்

பிரம்மஸ்ரீ. இ. சுப்பிரமணியக் குருக்கள் ஞாபகார்த்த நூல் வெளியீட்டு விழா

ஆபஸ்தம்பீஜ பார்வண மஹாளய சிராத்தப் பிரயோகம்

காலம்: - 08.09.2009 செவ்வாய்க்கிழமை பி.ப. 2.00 மணி

இடம் :- யா/ அரியாலை சித்திவிநாயகர் ஆலய மண்டபம்

நிகழ்ச்சி நிரல்

மங்கல விளக்கேற்றல்

இறைவணக்கம்

ஆசியுரை :- அதிவந்தனீய ஐ.மகேஸ்வரக்குருக்கள் (சுதுமலை) (சர்வதேச இந்துமத குரு பீடாதிபதி)

தலைமையுரை :- பிரம்மஸ்ரீ ப.சிவானந்த சர்மா (கோப்பாய் சிவம்) அவர்கள்

தொடக்கவுரை :- பிரம்மஸ்ரீ கு.சரவணபவக் குருக்கள் (இணுவில்)

அறிமுகவுரை :- பிரம்மஸ்ரீ. ஸ்ரீ.கிருஷ்ணானந்த சர்மா (நல்லூர்) (சிரேஷ்ட விரிவுரையாளர் சமஸ்கிருதத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

நூலாசிரியர் உரை :- பிரம்மஸ்ரீ.சோ.வரதராஜ சர்மா (கொழும்புத்துறை)

ஆய்வுரை :- பிரம்மஸ்ரீ.தா.மஹாதேவக் குருக்கள் (காயத்ரீபீடம் இணுவில்)

நூல் வெளியீடு

நன்றியுரை

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நீர்நொச்சித்தாழ்வு,
அரியாலை.
04.09.2009

சுபம்

இங்ஙனம்
குடும்பத்தினர்.

(C-3262)

# பிலிப்பைன்ஸ் அருகே

# பயணிகள் கப்பல் மூழ்கியதில் 9 பேர் பலி; 60 பேரைக் காணவில்லை

(மணிலா)

பிலிப்பைன்ஸ் நாட்டின் ஜெனரல் சாந்தோஷ் நகரில் இருந்து ஜலிபோலா நகருக்கு சூப்பர் பெர்ரி - 9 என்ற பயணிகள் கப்பல் சென்று கொண்டிருந்தது.

அந்த கப்பலில் ஆயிரம் பேர் பயணம் செய்தனர்.

நேற்று முன்தினம் அதிகாலை பிலிப்பைன்ஸ் நாட்டின் சாம்போங்கா தீபகற்பம் பகுதியில் சென்றபோது அந்த கப்பல் திடீரென மூழ்கத் தொடங்கியது. உடனே அதுபற்றி பிலிப்பைன்ஸ் அரசுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து கப்பலில் இருந்தவர்களை மீட்க பிலிப்பைன்ஸ் நாட்டின் கப்பற் படை, விமானப்படை ஹெலிகொப்டர்கள் மற்றும் தனியார் மீட்பு படகுகளும் அனுப்பிவைக்கப்பட்டன.

அதற்குள் கப்பல் மூழ்கி அதில் இருந்த 9 பேர் பலியாகி விட்டனர். இருந்தும் மீட்பு குழுவினர் போராடி கப்பலில் இருந்த 900 பேரை மீட்டனர்.

மீதி 60 பேரை காணவில்லை. இவர்களும் தண்ணீரில் மூழ்கி பலியாகி இருக்கலாம் என அஞ்சப்படுகிறது. (ஓ-6)



## ஆஸி .பெண்ணை கற்பழித்த இந்திய மாணவர்கள் கைது

அவுஸ்திரேலியாவில் படிக்கும் இந்திய மாணவர்கள் இரண்டு பேர் இளம் பெண்ணை கற்பழித்ததாக கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவுஸ்திரேலியாவில் ஏராளமான இந்திய மாணவர்கள் படிக்கின்றனர். இவர்கள் மீது அவுஸ்திரேலிய இனவெறியர்கள் சமீப காலமாக தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் மெல்போ நகரிலிருந்து சிட்னி நோக்கி சென்ற ரயிலில் பயணம் செய்த கோஸ்போர்டு நகரைச் சேர்ந்த 17 வயது பெண்ணை கற்பழித்ததாக சுகஜிந்தர் சிங் (22) அமர்ஜித்சிங் (28) என்ற இரண்டு இந் திய மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ள னர். இவர்களுக்கு பிணை மறுக்கப்பட்டுள் ளது. இந்த மாணவர்கள் மீதான விசாரணை எதிர் வரும் 16ஆம் திகதி நடைபெறவுள்ளது.(ஓ-6)

## குடித்து விட்டு கார் ஓட்டுவதால் ஏற்படும் விபத்துக்களை தடுக்க புதிய கருவி அறிமுகம்

குடித்துவிட்டு காருக்குள் ஏறி உட்கார்ந் தால் கார் ஸ்ராட் ஆகாது இதற்காக வடி வமைக் கப்பட்ட சிறப்புக் கருவியை அமெரிக்காவின் தேசிய நெடுஞ்சாலைப் பாதுகாப்புத்துறை அறிமுகப் படுத் தியுள்ளது.

அத்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது அமெரிக்காவில் குடித்து விட்டு கார் ஓட்டுவதால் விபத்தில் இறப்பவர்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் 13ஆயிரத்தை தொட்டு விடுகிறது ஆண்டுக்கு 10 இலட்சம் பேர் இக்குற்றத்தின் கீழ் கைது செய்யப்படு கின்றனர். இவர்களில் 3 இல் ஒரு பங்கினர் இக் குற்றத்தில் அடிக்கடி ஈடுபடுகின்றனர். இதைத் தடுக்கும் விடத்தில் ஒரு கருவி தயாரிக்கப் பட்டுள்ளது. (ஓ-6)

## மைக்கல் ஜாக்சனின் கையுறை ரூபா 25 இலட்சத்துக்கு ஏலம்

(மெல்போர்ன்)

மரணமடைந்த பிரபல பொப்பிசைப் பாடகர் மைக்கேல் ஜாக்சன் 1996ஆம் ஆண்டு சிட்னி நகரில் டெப்பி ரோவை திருமணம் செய்து கொண்ட போது அலங்கார கற்கள் பதித்த கையுறை ஒன்றை அணிந்திருந்தார்.



அப்போது நடந்த இசை நிகழ்ச்சியின் முடிவில் ஹிப்பிள் என்ற இசை ரசிகருக்கு அந்த கையுறையை ஜாக்சன் பரிசாக அளித்தார்.

அந்த கையுறை நேற்று முன்தினம் மெல்போர்ன் போன்ஹாம்ஸ் மற்றும் குட்மேன் கலைப்பொருள் கூடத்தில் ஏலம் விடப்பட்டது. இதை ஏலத்தில் எடுப்பதற்காக அமெரிக்காவில் இருந்தும் ஏராள மானவர்கள் வந்திருந்தனர்.

ஏலத்தொகை கிர் என்று உயர்ந்து கொண்டே போய் 25 இலட்ச ரூபாவில் நின்று அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரை சேர்ந்த ஹார்ட் ராக்ஹோட்டல் சார்பில் வார்விக் ஸ்டோன் என்பவர் இந்த கையுறையை ஏலத்தில் எடுத்தார். எதிர்பார்த்ததை விட இரண்டு மடங்கு தொகைக்கு ஜாக்சனின் கையுறை ஏலம் போனதாக தெரிய வந்துள்ளது. (ஓ-6)

## ஐக்கிய அரபு எமிரேட்ஸ் விமானம் கொல்கத்தாவில் சிறைபிடிப்பு

(கொல்கத்தா)

கொல்கத்தாவில் எரிபொருள் நிரப்புவதற்காக தரை இறங்கிய ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாட்டு விமானப்படை விமானத்தில் ஆயுதங்கள் , வெடிகுண்டுகள் இருக்கக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து விமானம் சிறைப்பிடிக்கப்பட்டுள்ளது.

அபுதாபியில் இருந்து சீனா செல்லும் வழியில் கொல்கத்தாவில் அந்த விமானம் தரையிறங்கியது. அப்போது விமானத்தில் ஆயுதங்கள் , வெடிகுண்டுகள் இருப்பது குறித்து அதன் விமானிகள் எதுவும் தெரிவிக்கவில்லை.

நிரப்புவதற்காக கொல்கத்தாவில் தரை இறக்க அனுமதி கோரியது. இதை ஏற்று இந்திய விமானப்படையின் கிழக்கு மண்டல அதிகாரிகள் அனுமதி அளித்தனர்.

விமானம் தரை இறங்கியதும் சுங்க இலாகா அதிகாரிகள் வழக்கமான சோதனைக்காக அதில் ஏறிய போது ஏராளமான ஆயுதங்கள் , வெடிகுண்டுகள் இருந்ததைக் கண்டு அதிர்ந்தனர். விமானத்தில் இந்த ஆயுதங்கள் இருப்பதை விமானிகள் மறைத்தது தெரியவந்தது.

இதையடுத்து இந்திய வான் பரப்பில் பறக்க அந்த விமானத்திற்கு வழங்கப்பட்ட அனுமதியையும் விமானப்படை இரத்துச்செய் தது.




இது சர்வதேச சட்ட விதிகளுக்கு முரணானது என்பதால் அதை சுங்க இலாகா அதிகாரிகள் சிறைப்பிடித்தனர்.

அதிலிருந்த விமானிகள் உள்ளிட்ட 9 பேரிடம் விசாரணை நடத்தப்பட்டு வருகின்றது.

சீனாவின் கன்யாங் நகருக்குச் சென்று கொண்டிருந்த அந்த விமானம் எரி பொருள்

விமானிகள் உள்ளிட்ட 9 பேரும் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர். இப்போது விமானம் சீல் வைக்கப்பட்டு விமான நிலையத்தின் தனிப்பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

சீனாவின் கன்யாங் பகுதி ஆயுத உற்பத்திக்கு பேர் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

## இரவில் நேரம் தவறி உண்பவர்களுக்கு உடல் நிறை அதிகரிக்கும் அபாயம்

### அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் எச்சரிக்கை

(வோஷிங்டன்)

இரவில் உரிய நேரம் தவறி காலதாமதமாக உண்பவர்களுக்கு உடல் நிறை [illegible]கும் அபாயமுள்ளதாக அமெரிக்க ஆராய்ச்சியா



ளர்கள் எச்சரித்துள்ளனர்.

இலினொயிஸ் மாநிலத்திலுள்ள நோர்த் வெஸ்டர்ன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்களே இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

வழமையான நேரத்தில் உண்ணாமல் நேரந்தவறி உண்பவர்களுக்கு, ஏனையவர்களுடன் ஒப்பிடுகையில் இருமடங்கு நிறை அதிகரிப்பு ஏற்படுவது தமது ஆராய்ச்சிகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இப்படி நேரந்தவறி உண்பவர்கள், எவ்வளவு உடற்பயிற்சி செய்யினும் அவர்களது நிறையைக் குறைப்பது சாத்தியமற்றதாக உள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

ஒவ்வொரு மனிதனின் உடலியங்கியல் செயற்பாடுகளும் குறிப்பிட்ட நேர ஒழுங்கு விதிகளுக்கு அமையவே நிகழ்கிறது எனவும், உணவை உள்ளெடுப்பது தொடர்பான நேரங்களில் ஏற்படும் மாற்றமானது அவ் ஒழுங்கு விதிகளிலான சமநிலையை பாதிப்பதால், உணவின் மூலம் பெறப்படும் சக்தியை எவ்வாறு உபயோகிப்பது என்பது குறித்து உடல் உறுப்புகள் குழப்பமடைவதகாகவும் இந்த ஆய்வுக்குத் தலைமை தாங்கிய டென்னா அர்பிள் தெரிவித்தார். (ஓ-6)

## மேற்கு வங்காளத்தில் வெள்ளம் 14 ஆயிரம் வீடுகள் இடிந்தன

### 1 ½ இலட்சம் பேர் தவிப்பு

(கொல்கத்தா)

வங்க கடலில் ஏற்பட்ட புயல் சின்னம் காரணமாக கடந்த ஒருவாரமாக மேற்கு வங்காளத்தில் பலத்த மழை கொட்டி வந்தது. இந்த நிலையில் புயல் மேற்கு வங்காளத்தில் கரையை கடந்தது. அப்போது அங்கு பலத்த மழை கொட்டியது. இதனால் மாநிலத்தில் பல இடங்களில் வெள்ளம் ஏற்பட்டு உள்ளது.

3 மாதத்துக்கு முன்பு ஜலா புயலால் மேற்கு வங்காளத்தில் பெரும் பாதிப்பு ஏற்பட்டது. இப்போது அதே பகுதியில்தான் வெள்ளம் ஏற்பட்டு உள்ளது. அதற்கு பாரகான், புர்பா, மெட்னிபூர், பங்குரா, புருலியா மாவட்டங்கள் வெள்ளத்தில் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன.

வெள்ளத்தினால் இதுவரை 14 ஆயிரம் வீடுகள் இடிந்துள்ளன. 1 அரை இலட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். பல இடங்களில் மக்கள் வெள்ளத்தில் சிக்கியுள்ளனர். அவர்களை படகு மூலம் மீட்டு வருகின்றனர். (ஓ-6)

# ஈழப்பிரச்சினை தீர கலைஞர் தலைமையில் தமிழக தலைவர்கள் ஒன்றாக வேண்டும்

## காங்கிரஸ் எம்.பி. சுதர்சன் நாச்சியப்பன் தெரிவிப்பு

(சென்னை)

இலங்கை தமிழர்களின் துன்பம் தீர தமிழக முதல்வர் கருணாநிதி தலைமையில் அனைத்து கட்சியினரும், தமிழ் இயக்கங்களும் ஒன்று கூடி முடிவெடுத்து நடவடிக்கையில் ஈடுபட வேண்டும் என்று காங்கிரஸ் எம்.பி. சுதர்சன் நாச்சியப்பன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தமிழக அரசியல் தலைவர்கள் தங்களுக்குள் உள்ள அரசியல் வேறுபாடுகளை மறந்து ஒன்றிணைந்து இலங்கை தமிழர்களின் துன்பம் தீர நிரந்தர தீர்வு காண வேண்டும். நாடு சுதந்திரம் அடைவதற்கும், சுதந்திரத்தை பேணி காப்பதிலும் தமிழர்களின் பங்கும்,




தொண்டும் கணிசமாக இருந்துள்ளது.

கடந்த 60 ஆண்டுகளாக மத்தியில் தமிழர்கள் முக்கிய பங்கு வகித்த ஆட்சிதான் இருந்து வந்திருக்கிறது.

எந்த வகையிலும் தமிழர்களை தனிமைப் படுத்தி அவர்களுக்கு விரோதமாக செயல்பட வேண்டிய அவசியம் மத்திய அரசுக்கு எப்போதுமே இல்லை. தமிழின விரோத போக்கை மத்திய அரசு கடைப் பிடிக்கிறது என்பது தேவையற்ற வாதம்.

இலங்கையில் தமிழர்கள் இழந்த மாநிலத்தை, குடியிருப்புகளை, விவசாய நிலங்களை, தொழிற்பேட்டைகளை, வழிபாட்டுத் தலங்களை மீண்டும் தமிழ் மக்களே பெறும் நிலையை கொண்டுவர வேண்டும்.

25 ஆண்டுகளுக்கு முன்பு பெற்றிருந்த நிலையை மீண்டும் பெற்றுத்தர வேண்டும். இதை செயல்படுத்த தமிழக முதல்வர் கருணாநிதி தலைமையில் அனைத்து கட்சியினரும் தமிழ் இயக்கங்களும் ஒன்று கூடி முடிபெடுத்து நடவடிக்கையில் ஈடுபட வேண்டும்.

குறுகிய கால அரசியல் லாபத்துக்கு இடமளிக்காமல் தமிழினத்தின் வாழ்வுரிமையை முன்னிறுத்த வேண்டிய கடமை நம் எல்லோருக்கும் உள்ளது. காங்கிரஸ் தலைவர் சோனியா, பிரதமர் மன்மோகன் சிங், ராகுல் காந்தி ஆகியோர் இந்த கருத்தையே கொண்டுள்ளனர்.

நமக்கு நாமே வசைபாடுவதும் குறை கூறுவதும் துன்பப்பட்டுக் கிடக்கும் இலட்சக் கணக்கான தமிழர்களை அலட்சியப்படுத்துவதாகும் என்று கூறியுள்ளார். (ஓ-6)

## தமிழ்நாடு மீனவர்கள் முதல்வரைச் சந்திக்க முடிவு

இலங்கை மீனவர்களுடன் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை தீர்த்து வைக்குமாறு தமிழ் நாடு மீனவர்கள் முதலமைச்சர் கருணாநிதியிடம் கோர இருக்கிறார்கள்.

கடலில் மீன் பிடிக்கும் போது இலங்கை மீனவர்களுடன் அடிக்கடி ஏற்படும் முறுகல் நிலை தொடர்பாகவும் கச்சதீவை இலங்கையிடமிருந்து மீண்டும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற கோரிக்கை தொடர்பாகவும் ஒரு வாரத்திற்கு மேலாக பணி நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் நாடு மீனவர்கள் இந்தப் பிரச்சினைகள் தொடர்பாக தமிழ்நாடு முதலமைச்சர் கருணாநிதியை இந்த வாரம் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த இருக்கிறார்கள். (ஓ-6)

## 2015 ஆம் ஆண்டிற்குள் இந்தியர் பூமியை வலம் வருவர்

### மாதவன் நாயர் தெரிவிப்பு

(கொச்சி)



எதிர்வரும் 2015 ஆம் ஆண்டுக்குள் பூமியைச் சுற்றி இந்தியர் வலம் வர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அதில் வெற்றி பெற்ற பிறகு ஐந்தாறு ஆண்டிற்கு பின் தான் நிலவுக்கு மனிதனை அனுப்ப முடியும் என இந்திய விண்வெளி ஆராய்ச்சி மைய தலைவர் மாதவன் நாயர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நிலவுக்கு விண்கலம் அனுப்பும் முயற்சியின் முதல் கட்டமாக சந்திராயன் - 1 வெற்றிகரமாக செலுத்தப் பட்டது. அதன் மூலம் பூமிக்கு 70 ஆயிரம் படங்கள் கிடைத்துள்ளது.

இந்த படங்கள் மற்றும் தகவல்கள் மூலம் அடுத்த ஆறு மாதத்தில் இருந்து இரண்டாண்டுகள் வரை நிலவு குறித்து ஆய்வு மேற்கொள்ள வசதி ஏற்பட் டுள்ளது.

சந்திராயன் திட்டம் மூலம் இலக்கில் 95 சதவீதம் வெற்றி பெற்றுள்ளோம். சந்திராயன் இப்போதும் செயல்பாட்டில் இருந்திருந்தால் நிலவில் பல இடங்களுக்கும் சென்று பல படங்களையும் அனுப்பி இருக்கும். சந்திராயன் மூலம் பெரிய நஷ்டம் ஏற்பட்டது என்று சொல்ல முடியாது.

நிலவுப் பாதையில் நாம் விண்கலம் அனுப்பியதே மிக பெரிய வெற்றி. அதுவும் முதல் கட்ட சோதனை முயற்சியே மகத்தான வெற்றியை பெற்று தந்துள்ளது. ஆனால் பல நாடுகளும் பல முறை சோதனை நடத்திய பிறகு தான் வெற்றி பெற்றுள்ளன.

சந்திராயனில் செயல்பட்ட ரிமோட் சென்டர் மூலம் நிலவின் அனைத்து பகுதிகளை குறித்தும் விவரங்கள் சேகரிக்க முடிந்துள்ளது. சந்திராயன் இரண்டாம் திட்டத்தில் ரோபோக்களை நிலவுக்கு அனுப்பி அங் குள்ள பொருட்களை சேகரித்து இரசாயன ஆய்வுக்கு பயன்படுத்த முடியும். எதிர்வரும் 2015 ஆம் ஆண்டுக்குள் பூமியை சுற்றி இந்தியர் வலம் வரும் நடவடிக்கைகளில் இப்போது இறங்கி உள்ளோம். அதற்கான பல்வேறு தேவைகளை ஆராய்ந்து வருகிறோம். இத்திட்டம் வெற்றி பெற்ற பின் ஐந்து அல்லது ஆறு ஆண்டுகளுக்கு பிறகே நிலவுக்கு மனிதனை அனுப்ப முடியும் இவ்வாறு மாதவன் நாயர் தெரிவித்தார். (ஓ-6)

## காபனை அதிகளவில் வெளியிடும் வளர்ந்த நாடுகளுக்கு ஐ.நா. கண்டனம்

(புதுடில்லி)

இந்தியா போன்ற நாடுகளை விட அமெரிக்கா போன்ற நாடுகள் காபனை அதிக அளவில் வெளியிட்டு மாசுபடுத்துகின்றன என்று ஐ.நா கண்டனம் தெரிவித்துள்ளது.

ஐ.நா. வெளியிட்டுள்ள இந்த ஆண்டுக்கான "உலகப் பொருளியல் மற்றும் சமூகவியல் ஆய்வு அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது,

வளர்ந்து வரும் இந்தியா போன்ற நாடுகள் காபனைக் குறைந்த அளவில் வெளியிடுகின்றன.

அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகள் 21 சதவீதம் மட்டுமே காபனை விட வேண்டும். ஆனால் 48 சதவீதம் காபனை வெளிவிடுகின்றன. தற்சமயம் 209 ஜிகா தொன்கள் காபனை வளர்ந்த நாடுகள் வெளிவிடுகின்றன.

அவை 2050 ஆம் ஆண்டுக்குள் 137 ஜிகா தொன்களாக (ஒரு ஜிகாதொன் - 100 கோடி தொன்) காபன் வெளியீட்டைக் குறைக்க வேண்டும்.

உலக வெப்பமயமாதல் இரண்டு டிகிரி சென்டிகிரேடுக்கும் கீழ் குறைய வேண்டுமானால் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் 2050க்குள் 80 சதவீதம் காபன் வெளியீட்டைக் குறைக்க வேண்டும்.

ஆனால் அந்நாடுகள் இதை ஏற்க மறுக்கின்றன. காபன் வெளிவிடுதலைக் குறைப்பதற்கு வளர்ந்த நாடுகள் தீவிரமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ஓ-6)

## ராஜசேகர ரெட்டியின் மறைவு குறித்து ஒரேநாளில் 15 பேர் மரணம்

### பலியானோர் எண்ணிக்கை 520 ஆக உயர்வு

(நகரி)

ஆந்திர முதல்வர் ராஜசேகர ரெட்டியின் திடீர் மரணம் ஆந்திரா முழுவதிலும் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியுள்ளது.

பல்வேறு நலத்திட்டங்களால் ஆந்திர மக்களின் மனதில் சிம்மாசனம் போட்டு அமர்ந்திருந்த அவரது மறைவை மக்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. தினந்தோறும் தங்கள் மனதில் கடவுளாக பூஜித்து வந்த அந்த உன்னத தலைவரின் துண்டு, துண்டாக சிதைக்கப்பட்ட உடலை தொலைக்காட்சியில் பார்த்ததுமே 300க்கும் மேற்பட்டோர் அதிர்ச்சியில் உயிரை இழந்தனர். 200 பேர் தூக்கு போட்டும், விஷம் சாப்பிட்டும் தற்கொலை செய்து கொண்டார்கள்.

ராஜசேகர ரெட்டி இறந்து 4 நாட்கள் ஆன பிறகும் ஆந்திர மக்கள் மனதில் உள்ள துக்கம் நீங்கியபாடில்லை. நேற்று முன்தினம் ஒரே நாளில் 12 பேர் விஷம் சாப்பிட்டும், தூக்கு போட்டும் தற்கொலை செய்து கொண்டார்கள். 3 பேர் அதிர்ச்சியில் உயிரை இழந்தனர்.

அனந்தபுரம் மாவட்டம் கிராமண பள்ளியை சேர்ந்த நாராயணசாமி என்பவர் ராஜசேகர ரெட்டியின் தொழில்கடன் திட்டத்தில் பயன்பெற்று முன்னேறியவர்கள். இவரால் ராஜசேகர ரெட்டியின் மறைவை தாங்கிக் கொள்ள முடியவில்லை. 4 நாட்களாக எதுவும் சாப்பிடாமல் கதறியபடியே இருந்தார். நேற்று முன்தினம் திடீரென விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்டார். இதேபோல ராஜசேகரரெட்டியின் உதவியால் திருப்பதி என்ஜினீயரிங் கல்லூரியில் படித்து வரும் வெங்கடராகவ ரெட்டியும் கடந்த 4 நாட்களாக வேதனையுடன் காணப்பட்டார்.

நேற்று முன்தினம் அவர் திருப்பதி ரெயில் நிலையம் சென்று ரெயில் முன்பாய்ந்து தற்கொலை செய்தார்.

இதேபோல் குண்டூர், கிழக்கு கோதாவரி, அனந்தபுரம் ஆகிய மாவட்டங்களிலும் 4 பேர் தூக்குபோட்டு தற்கொலை செய்து கொண்டனர். நேற்று முன்தினம் மாநிலம் முழுவதிலும் 15 பேர் உயிரை இழந்த சம்பவம் ஆந்திராவை அதிர்ச்சியில் உறைய வைத்துள்ளது. இதுவரை ஆந்திராவில் மொத்தம் 520 பேர் வரை அதிர்ச்சி மற்றும் தற்கொலையால் உயிரை இழந்துள்ளனர். (ஓ-6)

## வெளிநாட்டுப் பணத்துடன் படகில் வந்த இலங்கையைச் சேர்ந்த நோர்வே பொறியியலாளர்

### விசாரணையின்பின் மண்டபம் முகாமில்

(இராமேஸ்வரம்)

வெளிநாட்டு பணத்துடன் தனியாக வந்த இலங்கையைச் சேர்ந்த பொறியியலாளரான அகதியிடம் பொலிஸார் விசாரணை நடத்தினர். இலங்கை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிவபாலச்சந்திரன் (48), இலங்கையில் தொடர்ந்த சண்டையால் நோர்வே சென்ற இவர், ஒஸ்லோ நகரில் உள்ள பொறியியல் கல்லூரியில் படித்து, அங்கேயே பணியாற்றி நோர்வே குடியுரிமை பெற்றுள்ளார்.

இவர், இலங்கையில் சண்டை முடிபுக்கு வந்ததைத் தொடர்ந்து வவுனியா முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள தனது சகோதரனை பார்க்க இரண்டு மாதத்திற்கு முன் இலங்கை வந்துள்ளார்.

வவுனியா முகாமில் சகோதரனையும் அவரது மனைவியையும் சந்தித்தபின் இருவரையும் இந்தியாவிற்கு அழைத்து வர முயற்சித்துள்ளார்.

இலங்கை இராணுவத்தால் சிவபாலசந்திரனுக்கும் பிரச்சினை ஏற்பட்டதால் வவுனியாவிலிருந்து மன்னார் வந்து அங்கிருந்து படகில் அகதியாக இராமேஸ்வரம் வந்தார்.

தனுஷ்கோடி பொலிஸ் நிலையம் வந்த அவரிடம் பொலிஸார் சோதனை செய்ததில் நோர்வே நாணயமான குரோனி 4 ஆயிரத்து 700 இங்கிலாந்து பவுண்ஸ் 25, அமெரிக்க டொலர் 2 ஆயிரத்து 550 இலங்கை பணம் ஒன்றரை இலட்சம் மற்றும் ஒரு கையடக்கத் தொலைபேசி இருந்தது.

அகதி சிவபாலசந்திரன் கூறும்போது, வவுனியா முகாமில் உள்ள சகோதரனையும், அவரது மனைவியையும் முகாமில் இருந்து வெளியே அழைத்து வர அங்குள்ள ஏஜன்ட் ஒருவரிடம் ஒன்பது இலட்சம் ரூபாய் கொடுத்தேன். பணத்தை வாங்கிக்கொண்டு என்னையும் இலங்கை இராணுவத்திடம் பிடித்து கொடுத்து விடுவதாக மிரட்டினார்.

வேறு வழியின்றி வவுனியாவிலிருந்து இராணுவத்திற்கும் தெரியாமல் மன்னார் வந்து இங்கு அகதியாக வந்தேன்.

படகு கட்டணமாக ஒன்றேகால் இலட்சம் ரூபாய் இலங்கை படகோட்டியிடம் கொடுத்தேன் என்றார். அவரை பொலிஸார் விசாரணை செய்து மண்டபம் முகாமுக்கு அனுப்பி வைத்தனர். (ஓ-6)

# உள்ளத்தில் உற்சாகம்!

முதுமை காரணமாக உடல் கட்டமைப்பு மாறுகிறது. புரதச்சத்து குறைந்து, அதற்குப் பதிலாக கொழுப்புச் சத்து அதிகமாகிறது. தசைகள் பலவீனம் அடையத் தொடங்குகின்றன.



உடலின் திசுக்களும் பலவீனமடையத் தொடங்குகின்றன. ஜீரணத்துக்குரிய சுரப்புகள் செயல்படும் தன்மை குறையத் தொடங்குகின்றன. உணர்வு உறுப்புகளின் செயல் தன்மையும் குறைகிறது.

அதாவது பார்வை மங்குதல், காது போதிய அளவு கேட்காமை, சுவை மாறுதல், எரிச்சல் ஏற்படுதல் அஜீரணக் கோளாறுகள் ஏற்படத் தொடங்குகின்றன.




எனினும் உள்ளத்தை உற்சாகமாக வைத்துக் கொண்டு கெட்ட பழக்கங்கள் இல்லாமல் மருத்துவப் பரிசோதனைகளை 6 மாதத்துக்கு ஒரு முறை செய்து கொள்ளும் நிலையில் முதுமையை எளிதில் வெல்லலாம்.

முதுமையில் அதிகம் சாப்பிட முடியாது. பசியின்மை என்று தாங்களாகவே முதியோர் இந்நிலையை நினைத்துக் கொள்வார்கள். பற்கள் இல்லாமை காரணமாக காய்கறிகள், கீரைகள் ஆகியவற்றைச் சாப்பிட முடியாது என்பதால் பெரும்பாலானோருக்கு மலச்சிக்கல் பிரச்சினை இருக்கும். ஒரு சிலருக்கு வயிற்றுப் போக்கு பிரச்சினை தொடரும். ஊட்டச்சத்தை கிரகிக்கும் தன்மை உடலில் குறையும்.

முதுமை காரணமாக இதய நோய், சர்க்கரை நோய், சிறுநீரக பாதிப்பு உள்ளிட்டவை இருக்க வாய்ப்பு உண்டு. உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி குறைவு காரணமாக நோய்த் தொற்று ஏற்படவும் வாய்ப்பு உண்டு. எனவே இத்தகையோருக்கு சமச்சீரான ஊட்டச்சத்து உணவு அவசியம்.

மிருதுவான கஞ்சி, நன்கு வேக வைக்கப் பட்ட மிருதவான சாதம் ஆகியவை நல்லது. காரம் நிறைந்த உணவுகளைத் தவிர்ப்பது நல்லது.

உணவில் உப்பு, அதிக கொழுப்புச் சத்து நிறைந்த நெய், எண்ணெய் ஆகிய வற்றைக் குறைவாகச் சாப்பிடுவது அல்லது.

முதுமையின் மிகப் பெரிய பிரச்சினை எலும்பு வலுவிழத்தல். குறிப்பாக பெண்கள் முதுமையை எட்டியவுடன் எலும்பு வலுவிழத்தல் நோய் (ஒஸ்டி யோஸ்பொரேசிஸ்) ஏற்பட வாய்ப்பு உண்டு. இதே போன்று 65 வயதுக்குப்பிறகு ஆண்களுக்கு இதே நோய் ஏற்படவாய்ப்பு உண்டு.

இத்தகையோர் கல்சியம் சத்து நிறை ந்த சமச்சீரான உணவு சாப்பிடுவது நல்லது. ஆடை நீக்கிய பால், பச்சைக் காய்கறிகளை தொடர்ந்து சாப்பிட வேண்டும்.

பற்கள் இல்லா விட்டாலும் காய்கறிகளை நன்றாக வேக வைத்து, மிக்சியில் அரைத்து மசிய வைத்து கூடச் சாப்பிடலாம். காய்கறிகளை மசித்துச் சாப்பிட்டாலும் நார்ச்சத்து கிடைக்கும்.

மசிக்கும் நிலையில் வடி கட்டாமல் திரவத்துடன் சேர்த்து காய்கறிகளைச் சாப்பிட வேண்டும். முதுமையில் இனிப் புகளைத் தவிர்க்க வேண்டும். இரத்தத்தில் கொழுப்புச் சத்து அதிகரிக்காது.

மலச்சிக்கல் ஏற்படாமல் இருக்க தினமும் குடிநீர் போதுமான அளவு குடிப்பது அவசியம். முதுமையில் தாகம் எடுக்கும் உணர்வு பெருமளவு குறைந்து விடும்.

எனவே தண் ணீர் குடிக்க வேண்டும் என்ற உணர்வு ஏற்படாமலேயே, ஜீர்ண உறுப்புகளுக்கு நன்மை செய்யும் வகையில் நாள்

## முதுமையே ஓரம்போ

முழுவதுக்கும் குறைந்தபட்சம் 2 லீற்றர் தண்ணீர் குடிக்க வேண்டும்.

சாப்பிட்ட பிறகு ஒரு டம்ளர் தண்ணீர் குடிப்பதை வழக்கமாகக் கொள்ள வேண்டும். அத்தோடு பால்– மோர் – காய்கறி – சூப்பிலும் நீர் உள்ளது.

எனவே கோடைக் காலத்தில் தாகம் எடுக்காமலேயே தண்ணீர் குடிப்பதை முதியோர் பயிற்சியாகக் கொள்வது அவசியம்.



மூன்று வேளை சாப்பிடாமல் இடைவெளி விட்டு அதிக வேளைகள் சாப்பிட வேண்டும். உதாரணமாக காலை எழுந்தவுடன் சீனி இல்லாமல் ஆடை நீக்கிய பால், காலை 8.30 மணிக்கு 2 இட்லியுடன் சாம்பார் – புதினா சட்னி, காலை 10 மணிக்குள் மோர் (ஒரு சிறிய டம்ளர்) அல்லது காய்கறி சூப் அல்லது சத்து மாக் கஞ்சி, பருப்பு – கீரை சேர்ந்த மதிய உணவு மாலை சிற்றுண்டியாக பழம். இரவு 8 மணிக்கு இட்லி அல்லது இடியப்பம் அல்லது சப்பாத்தி அல்லது எண்ணெய் குறைவாக தயாரிக்கப்பட்ட தோசை ஆகியவற்றைக் கூட்டு பொரியலுடன் சாப்பிடலாம்.

இரவு படுக்கச் செல்லும் முன் பால் சாப்பிடலாம். இதுபோன்று சாப்பிட்டால் சமச்சீரான உணவுத் திட்டமாக அது அமையும். அவர்களுக்குத் தேவையான வேலைகளைச் செவ்வனே செய்வதற்கு குறைவான கலோரிச்சத்து கிடைக்கும். உடலில் ஏற்கனவே உள்ள நீரிழிவு நோய் உள்ளிட்ட பாதிப்புகளும் தீவிரமடையாது.

முதுமையை அடைந்து விட்டால் தம்மை கவனிக்க யாரும் இல்லை என விரக்தி உணர்வு வேண்டாம். கண் குறைபாடு, காது கேளாமை உள்ளிட்ட பாதிப்புகளைச் சரி செய்து கொள்வது அவசியம்.

ஏனெனில் உடல் உறுப்புகள் நன்றாக இருந்தால் தான் மன நிலை நன்றாக இருக்கு.

மனநிலை நன்றாக இருந்தால் தான் ஊட்டச்சத்து நிறைந்த உணவு குறித்த அக்கறை இருக்கும். நோயில்லா பெருவாழ்வு வாழலாம்.

# "வாக்கிங்" என்றால் என்ன தெரியுமா?

ஜிம் போன்று செலவு வைக்காத 'வாக்கிங்' உள்ளிட்ட உடற்பயிற்சிகள் உடல் நலனுக்கு நல்லது செய்யக்கூடியவை. குறிப்பாக நீரிழிவு நோயாளிகள், இதய நோயாளிகள் தினமும் "வாக்கிங்" செல்வது மிகுந்த பலனை அளிக்கும்.

நீரிழிவு நோயாளிகள் தினமும் நடைப் பயிற்சியை மேற்கொள்வதன் மூலம் கணையத்தில் இன்சுலின் உற்பத்தி சீராகும். இதனால் இரத்த சீனியின் அளவு அதிகரிக்காது.

தினமும் நடைப் பயிற்சி, உணவுக் கட்டுப்பாட்டை நீரிழிவு நோயாளிகள் கடமையாகக் கடைப்பிடிக்கும் நிலையில் இரத்தத்தில் சீனியின் அளவைக் கட்டுப்படுத்த மருந்துகளின் தேவை குறையும்.

ஆரம்ப நிலை நீரிழிவு நோயாளிகள் நடைப்பயிற்சி – உணவுக் கட்டுப்பாடு என்ற இரண்டு தாரக மந்திரங்களைக் கடைப்பிடித்தாலே போதும். டாக்டர் மருந்துக்கு தேவை இருக்காது.

மேற்சொன்னவை எல்லாம் மன உறுதி உள்ளவர்களுக்கான விடயங்கள். ஆனால் மேம்போக்காக தாங்களாகவே சில விடங்களை மதிப்பிட்டுக் கொண்டு விவாதம் செய்வோர் சிலர் உண்டு.

அதாவது, நான்தான் வீட்டுக்குள் தினமும் நடக்கிறேனே, பிறகு எதற்கு "வாக்கிங்" எனத் தனியாக காலையும், மாலையும் செல்ல வேண்டும் எனக் கேட்பார்கள். நட்பு ரீதியாக இந்த வாதத்தைக் கேட்டு விட்டு சும்மா இருந்து விடலாம்.

ஆனால் இத்தகைய வாதத்தை வைப்போருக்கு உண்மையான அறிவியல் பூர்வமான கருத்து வேண்டுமா? வீட்டில் பாத்திரம் தேய்ப்பது, சமையல் அறை – குளியல் அறை – கழிப்பறை செல்வது, மாடிக்கு நடந்து சென்று துணிகாயப் போடுவது, காலையோ அல்லது மாலையோ காய்கறிகள் வாங்க சந்தைக்கு சென்று வருவது, கோயிலுக்கு நடந்து சென்று வருவது... இவற்றையெல்லாம் "வாக்கிங்" என உடல் ஏற்றுக் கொள்வது இல்லை.

ஏனெனில் இந்த வேலைகளைச் செய்யும் போதெல்லாம் நாளைக்கு மின் கட்டண பில் கட்ட வேண்டுமே. குழந்தைகக்கு கல்விக் கட்டணம் செலுத்த வேண்டுமே.

அலுவலகம் சென்றவுடன் நண்பருக்கு மறக்காமல் தொலைபேசி செய்து குறிப்பிட்ட வேலையை முடிக்க வேண்டுமே... போன்ற கவலைகள் ஓடும். இவ்வாறு மனம் அமைதியாக இல்லாமல் நடப்பது எல்லாம் "வாக்கிங்" ஆகாது.



காலையிலோ அல்லது மாலையிலோ அமைதியான இடத்தில் எது குறித்தும் சிந்திக்காமல் கையை வீசி குறைந்தபட்சம் 45 நிமிடம் "வாக்கிங்" செல்வதையே உண்மையான "வாக்கிங்" என்கிறது மருத்துவம். இவ்வாறு செய்வதன் மூலம் இரத்த ஓட்டம் சீராகும். இதயம் நன்றி சொல்லும்.

கை – கால் உள்ளிட்ட உடல் உறுப்புகளுக்கும் சீரான பயிற்சி கிடைத்தது. தசைகள் வலுப்பெறும். யோகா, தியானம் ஆகியவையும் மனத்துக்கு அமைதி அளிக்கும்.

சத்தான உணவு நீரிழிவு இதய நோயாளியாக இருந்தால் உணவின் உற்ற தோழனாக விளங்குவதால், "வாக்கிங்" க்கு மருத்துவ ரீதியாக இத்தகைய முக்கியத்துவம் அளிக்கப் படுகிறது.

நீரிழிவு நோயாளிகளைப் பொருத் தவரை இன்சுலின் ஊசி மருந்தின் தேவை யைக் குறைக்கும் அளவுக்கு ஆற்றல் படைத்து வாக்கிங் இதய நோயாளிகளைப் பொறுத்த வரை உடல் எடையைச் சீராக்கும். ஆற்றல் படைத்து "வாக்கிங்" அதிக வேகமும் இன்றி மிகவும் மெதுவாக இல்லாமல் வியர்வை ஏற்படும் நிலையில் சீராக நடப்பதே "வாக்கிங்" என வரையறுக்கப்பட்டுள்ளது.

# தினமும் கல்சியம் எவ்வளவு தேவை?



குழந்தைகள், மாணவர்கள், இளம் பருவத்தினர் உட்பட அனைவருக்கும் கல்சியச் சத்து தேவை. பால் மற்றும் பால் சார்ந்த பொருள்களில் கல்சியச் சத்து அதிகம். காய்கறிகள், பழங்களிலும் கல்சியச் சத்து உள்ளது.

கல்சியச் சத்து உடலில் சேருவதால் எலும்புகள் வலுப்பெறும். குறிப்பாக குழந்தைகளும், இளம் வயதினரும் இளமைப் பருவத்தில் கல்சியச் சத்து நிறைந்த பால் உள்ளிட்ட உணவுகளைச் சாப்பிடுவது அவசியம். ஏனெனில் 18 வயதுக்குள் தான். எலும்புகள், பற்கள் நன்றாக வளாச்சியடையும்.

நரம்பு மண்டலம் உறுதியாக இருக்க கல்சியம் உதவும். இதேபோன்று இதயம் இதயத் தசைகள் வலுப் பெறவும் கல்சியம் உதவும். உயர் இரத்த அளவைக் குறைக்கவும் கல்சியம் உதவும்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மாணவர்கள், இளைஞர்கள் உட்பட பல்வேறு வயதினருக்கு தினமும் தேவைப்படும் கல்சியத்தின் அளவு : | குழந்தைகள் 1 முதல் 3 வயது வரை 500 மில்லி கிராம் | குழந்தைகள் 4 முதல் 8 வயது வரை 800 மில்லி கிராம் | இளம் வயதினர் 9 முதல் 18 வயது வரை... 1300 மில்லி கிராம் | 19 முதல் 50 வயது வரை... 1000 மில்லி கிராம் | 50 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு 1200 மில்லி கிராம் | கர்ப்பிணிகளுக்கு... 1300 மில்லி கிராம் |

யானையைக் கொன்று கைச்சுளகால் மூடமுடி யாது.

– தமிழ்ப் பழமொழி

வலம்புரி

## குற்றச் சாட்டுக்களை தடுக்க மறுப்புத் தெரிவிப்பதுதான் வழியா?

இலங்கையில் சிங்களவர் உள்ளனர், தமிழர் உள்ளனர், முஸ்லிம்கள் உள்ளனர் ஆனால் 'இலங்கையர்' உள்ளனரா? என்று தமிழ்ப் பேரா சிரியர் ஒருவர் கேள்வி எழுப்பி இருந்தார்.

அவரின் கேள்வியில் இருக்கக் கூடிய நியா யத்தை புரிந்து கொள்வதற்கும் அதனை செம் மையாக்கிப்பதில் அளிப்பதற்கும் பல வருடங்கள் எடுக்கலாம்.

இருந்தும் நாம் இலங்கையர் என்று கூறும் அளவிற்கு இந்த நாட்டு மக்களை கொண்டு வருவது எங்ஙனம் என்பது பற்றி ஆராய்வதில் யாரேனும் கவனம் செலுத்துவார்களாயின் அது போற்றுதற்குரியதாகும்.

ஆனால் அதுபற்றியாரும் சிந்திப்பதாக இல்லை. மாறாக இலங்கை எமக்குரிய நாடு என்பதில் மட்டுமே கவனம் செலுத்தப்படுகின்றது.

இனம், மதம், மொழி என்ற பற்றுதல் தேவை யானவை என்பதில் மாறுபட்ட கருத்துக்கிட மில்லை. அதற்காக ஏனைய இனத்தை, மதத்தை, மொழியை இம்சைப்படுத்துவதென்பது ஒருபோ தும் நியாயமாகாது.

அதேநேரம் பல்லின மக்களை கொண்ட இந்த நாட்டில் ஒரு இனம் மட்டும் ஆட்சிக்குரிய தென்ற முடிபும் நாட்டின் தேசிய ஒற்றுமைக்கு ஆரோக் கியமாக அமையாது.

நாட்டில் அபிவிருத்தி ஏற்பட வேண்டுமாயின் அங்கு தேசிய ஒற்றுமை ஏற்படவேண்டும். தேசிய ஒற்றுமையை அளவிடுவதற்கு அமைதி நிலவு கிறது, மக்கள் பிரச்சினை இல்லாமல் வாழ் கிறார்கள், இயல்பு வாழ்க்கை ஏற்பட்டுள்ளது என்ற சுட்டிகள் ஒருபோதும் உதவமாட்டா.

தேசிய ஒற்றுமை என்பது நான் இலங்கை யன் என எங்கும், எவ்விடத்திலும் மார்தட்டிக் கூறும் சக்தியாகும்.

சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் என்ற இன பாகுபாடு எழுச்சி பெறாமல், நாங்கள் இலங்கை யர் என்ற மூச்சுமட்டுமே உரம் பெற்றிருக்க வேண்டும்.

ஆனால் அத்தகைய நிலையை ஏற்படுத்து வதற்கான முயற்சிகள் அறவே இல்லை என லாம்.

மாறாக ஒரு இனத்தை இன்னொரு இனம் தாக்குவதும், தாக்கப்பட்ட இனம் தாக்கிய இனத் தின் மீது குற்றஞ்சாட்டுவதுமான நிகழ்வே தொடர் கின்றது.

உதாரணமாக சனல்–4 வீடியோக் காட்சியால் இலங்கை அரசு எத்தனையோ மறுப்புக்களைத் தெரிவிக்கவேண்டியுள்ளது.

ஐ.நாவும், அமெரிக்காவும் இது விடயத்தில் விளக்கம் கேட்க எந்தளவுக்கு அதனை மறுக்க முடியுமோ அந்தளவுக்கு மறுத்தான் கொடுப்ப தில் இலங்கை அரசு தீவிரமும், ஆவேசமும் அடைந்துள்ளது.

இந்நிலை எதற்காக? இது தேவைதானா? நாங்கள் இலங்கையர் என்ற நினைப்பு இருந் தால் குற்றச்சாட்டுக்களுக்கும் இடமிருக்காது மறுப்பும் தேவையற்றதாகிவிடும்.

ஆனால் குற்றச்சாட்டுக்களை மறுப்பதி லேயே எங்கள் காலம் கடந்து போகிறது.

# 10 ஆயிரம் பேர் காணாமல் போன குற்றச்சாட்டு தொடர்பில் உரிய விசாரணை நடத்தப்படும்

## அரசாங்கம் அறிவிப்பு



(கொழும்பு)

வவுனியா இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ள மக் களில் சுமார் 10 ஆயிரம் பேரை காணவில்லை என தெரிவிக் கப்படுகின்ற குற்றச்சாட்டு தொடர்பில் அரசாங்க மட்டத்தில் ஆராயப்படும். அடுத்த வாரம் நடை பெறவுள்ள அனைத்து அமைச்சுக்களுக்கிடையேயான குழுக்கூட்டத்தின்போது இவ்விடயம் குறித்து விசாரிக்க உள்ளேன் என்று மனித உரி மைகள் மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த சமர சிங்க தெரிவித்துள்ளார்.

வவுனியா இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ள மக்க ளில் சுமார் 10 ஆயிரம் பேரை காணவில்லை எனத்தெரிவிக் கப்படுகின்றது என்றும் இவர்களுக்கு என்ன நேர்ந்தது என் பது தொடர்பில் அரசாங்கம் உத்தியோக பூர்வமாக பதில ளிக்க வேண்டும் என்றும் எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத் துள்ளமை குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் மஹிந்த சமரசிங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அமைச்சர் இது தொடர்பில் மேலும் கூறுகையில்,

மோதல்களின் போது இடம்பெயர்ந்த மக்கள் அரச பாராம ரிப்பில் வவுனி யாவில் அமைந்துள் நலன் புரி முகாம்களில் தங்கவைக்கபட்டுள்ளனர். அந்த மக்களுக்குத் தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் நலன் புரி முகாம்களில் தங்கியுள்ள மக்களில் சுமார் 10 ஆயிரம் பேரை க்காண வில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் அரசாங்கம் பதிலளிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுக்கின்றன. எனவே இந்த விடயம் தொடர்பில் ஆராய வேண்டிய பொறுப்பு மனித உரிமை அமைச்சர் என்ற வகையில் எனக்கு இருக்கின்றது.

அனைத்து அமைச்சுக்களுக்கிடையேயான குழுக்கூட்டம் அடுத்தவாரம் எனது தலைமையில் நடை பெறவுள்ளது. அனைத்து அமைச்சுக்களின் பிரதி நிதிகள் மற்றும் சட்டாமா அதிபர் திணைக்களம், பொலிஸ்மா அதிபர் திணைக்களம் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் இந்த அமர்வில் கலந்துகொள்ள வுள்ளனர் .

இந்த விசேட அமர்வின்போது குறித்த காணாமல் போன தாகக் கூறப்படும் 10ஆயிரம் பேர் விவகாரம் தொடர்பில் நான் கேள்வி எழுப்பவுள்ளேன். இந்தக் குற்றச்சாட்டு எங்கிருந்து வந்தது ? யார் இதனை முன் வைத்தது ? எதன் அடிப்படையில் இந்தக் குற்றச்சாட்டு முன் வைக்கப்பட்டது என்பன தொடர்பில் விரிவான முறையில் ஆராயப்படும்.

உண்மையில் 10 ஆயிரம் பேர் காணாமல் போயுள்ளனர் என்பது மிகவும் பாரதூரமான குற்றச்சாட்டாகும்.மனித உரி மைகள் அமைச்சர் என்ற வகையில் நான் இது தொடர்பில் ஆராயவேண்டும் . காரணம் அரசாங்கம் அனைத்து விடயங் களையும் முறையாக மேற்கொண்டு வருகின்றது.

இடம்பெயர்ந்த மக்கள் முறையான பதிவின் பின்னரே முகாம்களுக்குள் அனுமதிக்கப்பட்டனர். இராணுவத்தினரிடம் சரியான பதிவுகள் உள்ளன. இதன் அடிப்படையில் இந்த குற்றச்சாட்டு தொடர்பில் ஆராயப்படும் என்பதனை தெரிவிக் கின்றேன். (ஓ-6)

# திஸ்ஸநாயகத்துக்குச் சிறைத்தண்டனை ஊடகத் துறையை மேலும் இறுக்கமாக்கும்

## ஏ.எப்.பி. செய்தி நிறுவனம் கருத்து

(கொழும்பு)

அமெரிக்கா உட்பட பல நாடுகள் கடுமையாகக் கண்டித்த போதும் தமிழ் ஊடகவியலாளரான ஜே.எஸ்.திஸ்ஸநாயகத் திற்கு அண்மையில் விதிக்கப்பட்ட 20 வருட கடூழிய சிறைத்தண் டனை நாட்டின் ஊடகத்துறையின் கைகளை மேலும் இறுக் கிக்கட்டிப்போடுவதற்கே வழிவகுத்துள்ளது என்று ஏ.எப்.பி. செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் அறிவிக்கப்படாத தணிக்கை முறை கடந்த ஒரு வருடகாலத்திற்கு மேலாக நடைமுறையில் இருந்து வரும் நிலை யில் இந்தத் தீர்ப்பு ஊடகங்கள் மீதான கட்டுப் பாட்டை மேலும் அதிகரித்துள்ளதாக ஏ.எப்.பி. கருத்துத் தெரிவித்துள் ளது.

திஸ்ஸநாயகத்தின் தண்டனைக்கு எதிராக பல்வேறுதரப் புக்களும் கடும் கண்டனம் தெரிவித்திருக்கின்றன. அவை அனைத்தையும் இலங்கை வெளிவிவகாரத்துறை ஒதுக்கித் தள்ளிவிட்டது.

இத்தகைய கருத்துக்கள் நாட்டின் சுயாதீனமான நீதித் துறையை களங்கப்படுத்துப வையாகவும் அதனை இகழ் பவையாகவும் இருக்கின்றன எனவும் அமைச்சு கூறியுள்ளது.

பயங்கரவாத தடைச்சட்டத்தை திஸ்ஸநாயகம் மீறினார் என் பதால் அவர் குற்றவாளி என நீதிமன்றம் தீர்ப்பளித்தது. 2006-2007ஆம் ஆண்டில் அவர் வெளியிட்ட கட்டுரை வன் முறைகளை உரு வாக்குவதற்கான அல்லது இன,சமூக நல்லி ணக்கத்தை குலைப்பதற்கான முயற்சி என நீதிமன்றம் தெரி வித்தது.

வரலாற்றில் முதல் தடவையாக ஊக த்தின் அடிப்படையில் ஒரு தீர்ப்பை நீதிமன்றம் வழங்கி உள்ளது என்றார் மனித உரிமை கள் செயற்பாட்டாளரான நிமல்கா பெர்னா ண்டோ இவர் ஒரு சட்டவளாரும் கூட.

அந்த எழுத்தில் வன்முறையை உருவாக்குவதற்கான எந்தச் சான்றுகளும் இல்லை. அது வெறும் ஊகம், இதனது அர்த்தம், யாருடைய எழுத்தையும் அது அமைதியைக் குலைத் தது அல்லது வன்முறையைத் தூண்டியது என்று அரசால் வாதாட முடியும் என்பதும் அவர்களைக் கைது செய்ய முடியும் என்பதும் தான் என்றார் நிமல்கா. ஊடகவியலாளர்களுக்கு எதி ராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படலாம் என்ற எதிர்பார்ப் பைத் தான் திஸ்ஸநாயகத்திற்கு எதிரான தீர்ப்பு வெளிக்காட்டு கிறது. இவ்வாறு ஏ.எப்.பி. மேலும் தெரிவித்துள்ளது. (ந-5)

# தேசிய பாடசாலை 2008 பகுப்பாய்வு

## முதல் ஐந்து இடங்களுக்குள் யாழ். இந்துக்கல்லூரி

(யாழ்ப்பாணம்)

நாடளாவிய ரீதியில் தேசிய பாடசாலைகளின் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகளில் யாழ்.இந்துக் கல் லூரி முதல் ஐந்து இடங்களுக்குள் இருப்பதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பில், கல்வி அமைச்சு யாழ்.இந்துக் கல்லூரி அதிபருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் 2008ஆம் ஆண் டில் நடைபெற்ற க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் நூறு வீத சித்தியை தங்கள் பாட சாலை பெற்றுள்ளது.

இதற்கு மேலாக 2008 உயர்தரப் பரீட்சையில் மருத்துவம் மற்றும் பொறியியல் துறையில் தங்கள் பாடசாலை முன்ன ணியில் உள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளது. (ந)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

## நம்பிக்கையும் வலிமையும்



போராட்டங்களையும் தவறுகளையும் பொருட்படுத்தாதே . பசு ஒன்று பொய் பேசியதாக நான் எந்தக் காலத்திலும் கேள்விப் பட்ட தில்லை. ஆனால் அது பசுவே தவிர ஒரு போதும் மனிதனாகி விடாது. எனவே இந்தத் தோல்விகளையும் இத்தகைய ஒழுக்கக் கேடுகளையும் ஒரு போதும் பொருட்படுத்தாதே. ஓராயிரம் முறை நீ உனது இலட்சியத்தைக் கைக்கொள். ஆயிரம் முறை நீ தோல் வியுற்றாலும் மீண்டும் ஒரு முறை கைக்கொள்ள முயற்சி செய். பலவீனத்திற்கான பரிகாரம், ஓயாது பலவீனத்தைக் குறித்துச் சிந்திப்பதல்ல மாறாக வலிமையைக் குறித்துச் சிந்திப்பதுதான் மக்க ளுக்கு ஏற்கனவே அவர்களுக்குள் இருந்து வரும் வலிமையைப் பற்றிப் போதிப்பாயாக.

# நாட்டின் சகல மாணவர்களுக்கும் உயர் கல்வி வழங்கப்படவேண்டும்

## ஜனாதிபதி வலியுறுத்து



நாட்டின் சகல மாணவர்களுக்கும் உயர் கல்வியைப் பெற்றுக்கொள்ளும் உரிமை பெற்றுக்கொடுக்கப்பட வேண்டுமெனவும் குறிப்பிட்ட ஒரு பகுதியினருக்கு மட்டும் அதனை மட்டுப்படுத்தப்படக்கூடாது எனவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கொழும்பு பல்கலைக் கழக பட்டமளிப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

பொது மக்களின் நன்மைக்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் பிரஜைகளை உருவாக்குவதே உயர் கல்வியின் முக்கிய நோக்கமாக அமைய வேண்டும்.

பட்டம் பெறுவதற்காக பல்கலைக்கழக பிரவேசம் பெறும் சகல மாணவர்களுக்கும் சமூகப் பொறுப்பு உண்டு என்பதை எவரும் மறந்து விடக்கூடாது. பல்கலைக்கழக மாண வர்கள் கோரிக்கைக்கும் அழுத்தத்துக்கும் ஆர்ப்பாட்டங்களுக்கும் தம்மை உள்ளாக்கிக் கொள்பவர்கள் அல்லர். அவர்கள் தமக்குரிய சமூக பொறுப்பினை உணர்ந்து செயற்பட வேண்டியது அவசியம்.

சிறந்த முன்னுதாரணமானவர்களாக அவர்கள் பல்கலைக்கழகதத்திலும் சமூகத்திலும் விளங்க வேண்டும். அத்துடன் தாய்நாட்டின் மீதும்சுற்றுச் சூழல் மீதும் நாட்டின் பொருளாதாரத்தின் மீதும் சிறந்த தெளிவைப் பெற்றுக் கொண்டிருத்தல் அவசியம்.

அதேபோன்று பட்டதாரிகள் ஆங்கில மொழித் தேர்ச்சி போன்று தகவல் தொழில் நுட்ப அறிவை வளர்த்துக்கொள்வதிலும் கவனம் செலுத்துவது அதிகரிக்கப்பட வேண் டும் பொது மனித நலன்கள் தொடர்பில் அர்ப்பணிப்புடன் செயற்படுபவராக பட்டதாரிகள் உருவாக்கப்படுவது அவசியமெனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (ஓ-6)

## நேர்முகப்பரீட்சைக்கான திகதி மாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ இணைப்பாளர் பதவிக்கு ஆட் சேர்ப்பதற்கான நேர்முகப்பரீட்சை தவிர்க்க முடியாத காரணத்தால் எதிர்வரும் 17ஆம் திகதி காலை 9.30 மணிக்கு நடைபெறும் என மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் தெரிவித்துள்ளார்.

இந் நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 15ஆம் திகதி நடைபெற இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ-4)

## குறைந்த அளவு பவன அமுக்கம்; மன்னாரில் கடும் சூறைக்காற்று

(கொழும்பு)

வங்காள விரிகுடாவில் ஏற்பட்ட குறைந்த அளவிலான பவன அமுக்கத்தின் விளைவாக சில தினங்களாக மன்னாரில் கடும் சூறைக் காற்று வீசி வருகின்றது.

இதனால் மன்னார் மக்களின் அன்றாட வேலைகள் பாதிக்கப்பட்டுள்ளது.

இதன் விளைவாக அடிக்கடி மின் தடங்கள் ஏற்பட்டு வரு கின்றது. மரங்கள் சரிந்து கிடக்கின்றன.

தோட்டங்களில் உள்ள வாழை, முருங்கை, மரங்கள் முறிந்து விழுந்துள்ளன.

சூறைக்காற்றுடன் மண் புழுதியும் கிளம்புவதால் மக்கள் வீதிகளில் நடமாட முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது. (ஓ-6)

## முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்களுக்கு சமய சேவைகளை வழங்க கோரிக்கை

(கொழும்பு)

தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் விடுதலைப்புலிகளின் உறுப்பினர்களுக்கு சமய சேவைகளை வழங்க அனுமதி அளிக்குமாறு மன்னார் மாவட்ட பேராயர் ராஜப்பு ஜோசப் இராணுவத்தளபதிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக வவுனியாவுக்கு பொறுப்பான இராணுவத் தளபதி கமல் குணரட்னவுடன் அவர் அண்மையில் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

புனர்வாழ்வு முகாம்களில் அவர்களுக்கு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் சமய சேவைகளை வழங்க அனுமதி அளிக்குமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர்கள் தமது பழைய வலிகளை மறந்து புதிய வாழ்க்கை முறையை ஆரம்பிப் பதற்கு உதவும் வகையில் இது அமையும் என அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஆலோசனை நடத்துவதாகவும் சமய சேவைகளை புனர்வாழ்வு நடவடிக்கையின் ஒரு அங்கமாகக் கொள்வது சிறந்தது எனவும் வவுனியாவுக்கு பொறுப்பான இராணுவத் தளபதி குறிப்பிட்டுள்ளார். (ஓ-6)

## பதவியுயர்வு என்ற போர்வையில் சரத் பொன்சேகாவை அரசு ஓரம்கட்டியுள்ளது

### எஸ்.பி.திஸாநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை ஓரங்கட்ட அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் சதித் திட்டங்கள் தொடர்பில் இந்த நாடே அறிந்துகொண்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பதவி உயர்வு என்ற போர்வையில் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை அரசாங்கம் ஓரம்கட்டியுள்ளதாகவும் சரத் பொன்சேகாவிற்கு அரசு இழைக்கும் அநீதிகள் தொடர்பாக முழு நாடுமே அறிந்துகொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். மேலும், ஐக்கிய தேசியக் கட்சியை விடவும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் உட்பூசல் அதிகமாகக் காணப்படுவதாகவும், விரைவில் இவை வெளிச்சத்திற்கு வரும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் வெற்றிக்காக அரும்பாடுபட்ட மங்கள சமரவீர போன்றோருக்கு அரசாங்கம் காட்டும் நன்றி அருவருக்கத் தக்கதென அவர் குறிப்பிட்டுள்ளார். (ஓ-6)

## சுற்றாடல் தொடர்பான சட்டதிட்டங்கள் கடினப் படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்படவேண்டும்

### பிரதம நீதியரசர் தெரிவிப்பு

(கொழும்பு)

இயற்கையையும் அதன் பெறுமதியையும் பாதுகாக்க வேண்டிய அடிப்படைப் பொறுப்பு அரசாங்கத்திடம் இருப்பதாக பிரதம நீதியரசர் அசோக் டி சில்வா தெரிவித்துள்ளார்.

இதற்கான சட்டதிட்டங்கள் கடினப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

தற்போது சுற்றாடல் தொடர்பான சட்டதிட்டங்கள் அதிக அளவில் மீறப்பட்டு வருவதாக அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

இதேவேளை 13ஆவது திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் பட்சத்தில் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் தற்போது நிலவுகின்ற வேலையின்மை உள்ளிட்ட பிரச்சினைகளால் சுற்றாடலுக்கான பாதிப்பு அதிகமாக எழுந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் வாகன புகை போன்றவற்றாலும் சூழல் மாசடையும் போதும் அதற்கு சாதகமான எந்த நடவடிக்கைகளையும் அரசாங்கம் முன்னெடுப்பதாக தெரியவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஓ-6)

After A/L ? ? ?




உங்கள் பரீட்சைப் பெறுபேற்றுக்காக காத்திருக்கும் நாட்களில் கணனிக் கல்வி கற்பதில் குழப்பமா?

கவலையை விட்டு வாருங்கள்!

இடம்:- வீரசிங்கம் மண்டபம்

காலம்:- 09.09.2009 நேரம்:- 9.00am

நாங்கள் கை கொடுப்போம் ஏனெனில்....

உங்களுக்காகவே நாங்கள்.

(சி/3267)

ESOFT

கருத்துரை வழங்குவோர் :
Mr.M.IGNATIUS
B.A. (Hons).PGDE, M.Ed, SLEAS III
Principal.
Palaly Teachers' College.

Mr. V.ARULANANTHAM
B.A.(Hon),MA in Econ,Dip in Public Adm
Manager
National Savings Bank Jaffna.

மற்றும் எமது கொழும்பு தலைமை நிறுவனத்தின் விரிவுரையாளர்களும் பங்கு பற்றுவார்கள்.

ஜெஸ்வின் கணனி பயிற்சியகம்

2ஆம் குறுக்குத்தெரு,பருத்தித்துறை

Software Engineering
web Design
Hardware Engineering

பாடத்திட்டங்களின் 3மாத பயிற்சி நெறியினை மேற்கொள்ளும் ஒவ்வொரு வருக்கும் கணனி இயந்திரம் பயிற்சி நெறி முடிவில் இலவசமாக வழங்கப்படும். இத் திட்டம் 20.09.2009 தொடக்கம் 01.10.2009 வரையுமே 20 பேர் மட்டுமே இணைத்துக்கொள்ளப்படுவர். பயிற்சி நெறியில் இணைந்து கணனி இயந்திரத்தை இலவ சமாகப் பெற்றுக்கொள்ளுங்கள். மேலதிக விபரத்திற்கு பயிற்சி நிலையத்தில் தெரிந்து கொள்ளலாம்.

(சி/3264) நிர்வாகி





சில்லாலை சென்.ஜேம்ஸ் முன்பள்ளி விளையாட்டுவிழா அண்மையில் நடைபெற்றது. இதில் முன்பள்ளி சிறார்களின் பான்ட் வாத்திய இசையுடன் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் சிறார்களின் விளையாட்டு நிகழ்வையும் கலந்து கொண்ட பெற்றோர்களையும் படங்களில் காணலாம்.

## ஜோன்ஸன் சகல துறையிலும் ஜொலிப்பு

# இரண்டாவது போட்டியிலும் வென்று ஆஸி. தொடரில் முன்னிலை பெற்றது

(லண்டன்)

ஜோன்ஸனின் சகல துறை ஆட்டத்தின் மூலம் அவுஸ்திரேலிய அணி 39 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்து அணியை வீழ்த்தி தொடரில் 2:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணி 5 டெஸ்ட் போட்டிகள் கொண்ட ஆஷஸ் தொடர் மற்றும் 7 போட்டிகள் கொண்ட நாட்வெஸ்ட் ஒருநாள் தொடரிலும் விளையாடுகின்றது.

இதில் ஆஷஸ் டெஸ்ட் தொடரை இங்கிலாந்து அணி 2:1 என்ற கணக்கில் கைப்பற்றிய நிலையில் 7 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் முதலாவது போட்டியில் அவுஸ்திரேலிய அணி வெற்றிபெற்று தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

இந்நிலையில் இரண்டாவது ஒருநாள் போட்டி நேற்று முன்தினம் லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணித்தலைவர் ஸ்ரொரஸ் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய பேர்ஹுசன், ஜோன்சனின் அதிரடியான துடுப்பாட்டத்தின் மூலம் 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களையிழந்து 249 ஓட்டங்களை எடுத்தது.

ஒரு கட்டத்தில் 45.4 ஓவர்களில் 208 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 8 விக்கெட்டுக்களை யிழந்திருந்த அவுஸ்திரேலிய அணியை ஜோன்ஸன்-ஹயூரிச் ஜோடி 4.2 ஓவர்களில் 41 ஓட்டங்களைக் குவித்து வலுவான நிலைக்கு தூக்கி நிறுத்தியது.

இதில் பேர்ஹுசன் 58 பந்துகளில் (5பவுண்டரி உட்பட) 55 ஓட்டங்களையும் ஜோன்ஸன் ஆட்டமிழக்காமல் 23 பந்துகளில் (5 பவுண்டரிகள் உட்பட) 43 ஓட்டங்களையும் வைற் 42, வோட்சன் 34 ஓட்டங்க ளையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ரைட், சுவான் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் அன்டர்சன், சயிட் பொத்தம், பிரேஷ்னன் மற்றும் பொப்ரா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 250 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணிக்கு ஆரம்பத்துடுப்பாட்ட ஜோடியான ஸ்ரொரஸ்-பொப்ரா இணைந்து சிறப்பான ஆரம்பத்தை வழங்கினர்.

இந்த ஜோடி முதலாவது விக்கெட்டுக்காக 14.5 ஓவர்களில் 74 ஓட்டங்களை எடுத்த போது பொப்ரா 27 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

எனினும்தொடர்ந்து களமிறங்கியவர்களில் கொலிங்வூட் மட்டும் பிரகாசித்த போதும் இங்கிலாந்து அணி 46.1 ஓவர்களில் 210 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்து 39 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில ஹொலிங்வூட் 56 ஓட்டங்களையும் அணித்தலைவர் ஸ்ரொரஸ் 47 ஓட்டங்களையும் ரைட் 20 ஓட்டங்களையும் எடுத்தனர்.



பந்துவீச்சில் பிரெட்லீ, பிறக்கன், ஜோன்சன் மற்றும் வோட்சன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் ஹயூரிச் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்

இவ்வெற்றியின் மூலம் அவுஸ்திரேலிய அணி 7 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 2:0 என்ற கணக்கில் முன்னிலைபெற்றது.

இப்போட்டியில் சகல துறையிலும் ஜொலித்து அவுஸ்திரேலிய அணியின் வெற்றிக்கு வழியமைத்த ஜோன்சன் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.


## குறும்பட வெளியீட்டு விழா

அருட்பணி

அல்பேட் ஜோ. அருள்ராஜா

தயாரித்து வழங்கும்

நற்செய்தி அறிவிக்கவே நீ பிறந்தாய் – 04

உன்னைத் தேடி....

- கிறிஸ்தவ குறும்படம் -

ஒளிப்பதிவு  
லது டிஜிற்றல்

ஒலிப்பதிவு  
சப்தமி கலையகம்

இசை  
T.றொபேட்

இயக்கம்  
யே.ம.யோஷப்மேரி

காலம் :– 08.09.2009

இடம் :– பாசையூர் புனித அந்தோனியார் ஆலயம்

❖ காலை 6.00 மணித் திருப்பலியைத் தொடர்ந்து வெளியீடு இடம்பெறும்


"அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்"

- நன்றி -

இறைபணியில்,  
அல்பேட் ஜோ.அருள்ராஜா CMF  
கிளாரட் அகம்  
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

(3386)


# அமெரிக்க ஓபன் டென்னிஸ் செரினா காலிறுதிக்கு தகுதி



கிராண்ட்சிலாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டி நியூயோர்க் நகரில் நடைபெற்றுவருகிறது.

உலகின் இரண்டாம் நிலை வீராங்கனையான செரீனா வில்லியம்ஸ் (அமெரிக்கா) 4 ஆவது சுற்றில் சுலோவாக்கியாவை சேர்ந்த 22ஆம் நிலை வீராங்கனையான டேனிலாவை எதிர்கொண்டார்.

இதில் செரீனா 6-2,6-0 என்ற நேர்செட் கணக்கில் எளிதில் வென்று காலிறுதிக்கு தகுதி பெற்றார். மற்ற ஆட்டங்களில் 3ஆம் நிலை வீராங்கனையான வீனஸ் வில்லியம்ஸ் (அமெரிக்கா) அதிர்ச்சிகரமாக முன்னாள் நம்பர்-1 வீராங்கனை கிம்லிஸ்டரிடம் (பெல்ஜியம்) தோற்றார். கிலிஸ்டர்ஸ் 6-0,0-6,6-4 என்ற கணக் கில் வீனசை வென்று காலிறுதிக்கு முன்னேறி னார்.

கிலிஸ்டருக்கு குழந்தை கிடைத்த பின் மீண்டும் களம் திரும்பி உள்ள அவர் தொடர்ந்து சிறப்பாக விளையாடி வருகிறார். ஆண்கள் பிரிவில் மூன்றாம் நிலை வீரரான ரபெல் நடால் (ஸ்பெயின்) 7-5,6-4,6-4 என்ற கணக்கில் நிக்கோலசை (ஸ்பெயின்) வீழ்த்தி 4-வது சுற்றுக்கு தகுதி பெற்றார்.

மற்ற ஆட்டங்களில் கார்லோஸ் பெனரரா (ஸ்பெயின்), டெல் போர்ட்டோ (ஆர்ஜெண்டினா), [illegible]னாண்டோ சோலைஸ் (சிலி) மான் பிலிஸ் ஆகியோர் வென்று 4ஆவது சுற்றுக்குள் நுழைந்தனர்.

# நலன்புரி முகாம்களில் உள்ளவர்கள்...

ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷவுக்கும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கிடையிலான விஷேட சந்திப்பு நேற்று ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்றது.

நேற்று மாலை 4.30 மணி தொடக்கம் இரவு 7.30 மணிவரை சுமார் 3 மணித்தியாலங்கள் நடைபெற்ற இச்சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன், சிறிகாந்தா, என்.சிவசக்தி ஆனந்தன், ஐ.எம்.இமாம், கே.தங்கேஸ்வரி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

அரச தரப்பில் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் நாடாளுமன்ற உறுப்பினர் பசில் ராஜபக்ஷ, கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த, மீள்குடியேற்ற அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் ரிஷாட் பதியூதீன், ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, யாழ்.பிராந்திய படைத்தளபதி மேஜர் ஜெனரல் கமால் குணரட்ண ஆகியோர் கலந்துகொண்டனர்.

இச்சந்திப்புத் தொடர்பில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தகவல் தருகையில்,

வன்னிமோதல்களால் இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்கள் பருவ மழைக்கு முன்னர் மீள் குடியேற்றப்படவேண்டும் அல்லது அம் மக்கள் பெரும் கஷ்டங்களையும் துன்பங்களையும் அனுபவிக்க வேண்டி வரும்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அம் மக்களை நேரில் சென்று பார்வையிட வேண்டும். நலன்புரி முகாம்களில் தற்போது மக்களுக்கு வழங்கப்படும் உதவிகள் போதாது. அதில் மாற்று நடவடிக்கைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அத்துடன் வடக்குக் கிழக்கிலுள்ள படையினர் படிப்படியாகவாவது மீளப்பெறப்பட வேண்டும் என்பது குறித்து வலியுறுத்தினோம்.

இதற்கு ஜனாதிபதி தரப்பில் கூறப்பட்டவையாக, நலன்புரிமுகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளவர்களை பொறுப்பேற்க அவர்களின் உறவினர்களோ, நண்பர்களோ முன்வந்தால் விடுவிக்க அரசாங்கம் தயாராகவுள்ளது. ஆனால் நலன்புரி முகாமிலிருந்து விடுவிக்கப்படுபவரோ அல்லது அவரைப் பொறுப்பேற்க வருபவரோ புலிகளுடன் தொடர்பற்றவரென முதலில் உறுதிப்படுத்த வேண்டும்.

இதற்காக முகாம்களில் இருந்து விடுவிக்கப்படுபவர்கள் அரச படைகளின் புலனாய்வுத் துறையினரால் விசாரணை செய்யப்பட்டு புலிகளுடன் தொடர்பில்லை என்பது உறுதி செய்யப்படும்.

அத்துடன் அவர்களைப் பொறுப்பேற்கும் உறவினர்களோ, நண்பர்களோ புலிகளுடன் தொடர்பில்லை என்பதும் படைப் புலனாய்வாளர்களால் விசாரணை செய்யப்படும்.

அதேவேளை தற்போது முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள 3 இலட்சம் பொதுமக்களையும் படம் பிடித்து இராணுவப் புலனாய்வாளர்கள் விசாரணை செய்து வருகின்றனர்.

இதில் புலிகளுடன் தொடர்பில்லை என இராணுவத்தினரால் உறுதிப்படுத்தப்பட்ட பின் அவர்களின் விபரங்கள் குறித்த மாவட்ட அரசாங்க அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். அதனை அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர், கிராம சேவையாளர் ஊடாக அம் மக்களின் வதிவிடங்கள் உறுதி செய்து மீள் குடியேற்றக் குழுவுக்கு அனுப்புவார்.

இதன் பின்னரே மக்கள் குடியமர்த்தப்படுவர். தற்போது வவுனியா மாவட்டத்தில் 35 கிராமங்களில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுவிட்டது. எனினும் ஐக்கிய நாடுகள் சபை நிறுவனம் 27 கிராமங்களுக்கே கண்ணிவெடிகள் இல்லை என உறுதிச் சான்றிதழ் வழங்கியுள்ளது.

எனவே கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலும் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டபின் அதற்கான உறுதிச் சான்றிதழை ஐ.நா நிறுவனம் வழங்கிய பின்பே அங்கு மக்க[ள்] மீளக்குடியமர்த்தப்படுவர்.

இவ்வாறு நலன்புரி முகாம் மக்களின் மீ[ள்] குடியேற்றம் தொடர்பில் ஜனாதிபதி தரப்பி[ல்] கூறப்பட்டது.

வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயப்[பகு]தியில் மக்களின் குடியேற்றம் தொடர்[பில்] கேட்கப்பட்டபோது, அதற்கு தமிழ்த் தேசி[ய]க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்[கள்] வடக்கு மாகாண ஆளுநருடன் தொடர்[ந்து] கலந்துரையாடுமாறு ஜனாதிபதி குறிப்[பிட்]டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளு மன்ற உறுப்பினர்கள் நலன்புரி முகாம் மக்களைப் பார்வையிட அனுமதிப்பது தொட[ர்]பில் பாதுகாப்பு சபையில் ஆராய்ந்து முடிவு தரப்படும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளு மன்ற உறுப்பினர் கனகரத்தினத்தின் வி[டு]தலை தொடர்பில் வலியுறுத்தினோம்.

ஆனால் நாடாளுமன்ற உறுப்பினர் கன கரத்தினம் விடுதலைப் புலிகளுடன் நெருக்[க]மானவர் என்பது விசாரணைகளில் தெரிய வந்துள்ளது என ஜனாதிபதி குறிப்பிட்டார். கார[ண]ம் அவரது சகோதரர் மாவீரர் என்பதுடன் மகன் போராளி. எனவே புலிகளுடன் நெருக்கமானவரை எவ்வாறு விடுதலை செய்வது என்று ஜனாதிபதி தரப்பில் பதில் தரப்பட்டது.

நேற்றைய சந்திப்பு முதலாவது எனவும் இரு தரப்புக்கும் இடையே ஒரு புரிந்துணர்[வு] ஏற்பட்டு சந்திப்புக்கள் தொடர வேண்டுமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கேட்டுக் கொண்டார் என நாடாளுமன்ற உறுப்பினர் சுரே[ஷ்] பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

(ந-5)


புதிய பிரிவுகள் ஆரம்பம்

Diploma Courses...

09.09.2009 முன் பதிபவர்களுக்கு விசேட கட்டணசலுகை

# Microsoft Office * English * Accounting

*DTP,Hardware * Web Developing

* Video Editing *AutoCAD * VB.net,LINUX

International Courses...

MCP_Microsoft Certified Professional

MCSE_Microsoft...Systems Engineer,ICDL

Sun Java programmer,Cisco-CCNA,

Degree Course * BIT Semester 1,3 & 5,Project

MCS Supported By UNDP/JRRP

மேலதிக விபரங்களுக்கு நேரில்,

324, பலாலி வீதி,பரமேஸ்வராசந்தி அருகில்

யாழ்ப்பாணம், 0772395895



ஸ்ரீ லங்கா இன்ஷூவரன்ஸ் இலங்கையின் பாரிய மற்றும் வலிமை வாய்ந்த அரச கூட்டுக் காப்புறுதி வழங்குநராகும். வலிமையான மீள் காப்புறுதி ஏற்பாடுகள், அனுபவமிக்க தொழிநுட்ப அறிவுத்தளம், அகன்ற நாடுத்ழுவிய வலையமைப்பு ஆகியவற்றுடன் இலங்கை மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் 46 ஆண்டுகால அனுபவம் கொண்ட நிறுவனம் இதுவாகும். முற்செயற்பாடு, செயலூக்கம், சிறந்த வினையாற்றும் திறன்கொண்ட தலைமைத்துவப் பண்புகள் மற்றும் அர்ப்பணிப்புடன் எம்முடன் இணையத்தயாரான தொழில் நிபுணத்துவ அணிகளுக்கான தனிநபர்களைத் தேடுகிறோம். சாதிப்பதற்கான பேரார்வமும் செய்துமுடிப்பதற்கான உறுதிப்பாடும் உள்ளவராயின் உங்களைச் சந்திக்க நாம் ஆவலாயுள்ளோம்.

ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ்

க.பொ.த.(உ/த) பரீட்சைக்குத் தோற்றும் அனைவருக்கும் எமது நல்வாழ்த்துக்கள்

இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்

நீங்கள் பின்வரும் தகைமை கொண்டு

- க.பொ.த.(சா/த)ல் கணிதம் மற்றும் மொழி உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்
- சிறந்த தொடர்பாடல் திறன்
- வயதெல்லை 18 - 30

எங்களுடன்இணைந்தீர்களுக்கு தோற்றிய மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்

- வருமானம் ஈட்டுவதற்கான பயிற்சி நெறிகள்
- ஆரம்ப பயிற்சிகளின் பின்னர் அரசதொழில் அனுமதிப்பத்திரம்
- தொழில் பாதுகாப்பு

ஆகியவற்றின் மூலம் உங்களின் வருமானத்தை நீங்களே தீர்மானிக்கும் உரிமை கிடைக்கப்பெறும்

விண்ணப்ப முடிவுத் திகதி 10.09.2009

நிறுவனத்தின் இலக்கான பிராந்தியத்தின் சிறந்த நிதியியல் சேவை வழங்குநராதல் என்பதை அடையத் தேவையான பெறுபேறுகளை ஈட்டும் திடநம்பிக்கை கொண்டவராயின் உங்களின் சுயவிபரக் கோவையை குறித்த திகதிக்கு முன்னர் பின்வரும் முகவரிக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வையுங்கள்.

விற்பனை முகாமையாளர் - ஆயுள்

ஸ்ரீ லங்கா இன்ஷூவரன்ஸ் கோர்ப்பரேஷன் லிமிட்டட்

1ம் மாடி

வீரசிங்கம் மண்டபம்,

யாழ்ப்பாணம்

(C-3268)


## ஐ.நா. அதிகாரியை வெளி...

மீள்பரிசீலனையில் உள்ளது.

யுனிசெப் எம்முடன் பேசினார்கள். நாங்கள் அவற்றைச் செவி மடுத்துள்ளோம். எங்களுடைய பார்வையில் அவர் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான பரப்புரையில் ஈடுபட்டிருந்தார் எனக் கூறினார்.

ஆனால் இந்தக் கருத்துகளை மறுத் துள்ள யுனிசெப், தனது அதிகாரி அவரது கடமையைச் செவ்வனே செய்தார் என்றும் யுனிசெப் சார்பில் என்ன கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டவோ அவை தொடர்பில் தெளிவாக வும் உறுதியாகவும் இருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

இலங்கையில் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் மற்றும் பெண்கள் சார்பில் மேஜம்ஸ் எல்டர் தொடர்ந்தும் பணியாற்றுவதற்கு அனுமதிக்கப்பட வேண் டும் என்றே நாம் நம்புகின்றோம் என வலியுறுத்தினார் யுனிசெப்பின் ஆசிய பிராந்தியத்திற்கான தொடர்பாடல் துறைத் தலைவர் சாரா குரோவ்.

எல்டர் வெளியேற்றப்படுவதற்கான காரணம் குறித்து அதிகாரிகளும் அமைச்சர்களும் பல்வேறு குழப்பமான கருத்துக்களை வெளியிட்டு வரு கின்றனர் எனவும் ஆனாலும் தவறான புரிதல்கள் அல்லது தவறான தக வல் பரிமாற்றங்கள் இருக்கலாம் என்பதால் சரியான காரணத்தை தெளிவு படுத்தும் படி நாம் இப்போதும் கேட்டுக்கொண்டிருக்கிறோம் எனவும் சாரா கூறினார்.

(ந-5)

## கொழும்பில்...

மட்டக்குழியவில் இருந்து கல்கிஸை நோக்கி சென்று கொண்டிருந்த 155 ஆம் இலக்க பய[ணி]கள் பஸ் அனைத்தும் எட்டியாவத்தை சந்தியில் வழி மறிக்கப்பட்டு சோதனைகள் இடம்பெற்றன.

அதில் பயணம் செய்த மூன்று இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என தெரி விக்கப்பட்டது.

கொழும்பில் தொடர்ச்சியான தேடுதல் நட வடிக்கைகள் இடம் பெற்று வருவதாகவும் தெரி விக்கப்பட்டது. (ந-5)

## மரண அறிவித்தல்

### அன்னலெட்சுமி (சந்திராதேவி) திருச்செல்வம்

(ஓய்வு பெற்ற ஆசிரியை)



யாழ்ப்பாணம்,சிவன்பண்ணை வீதியை பிறப்பிடமாகவும்,16,ஆசிர்வாதம் ஒழுங்கை , ஆஸ்பத்திரி வீதியை வதிவிடமாகவும் கொண்ட அன்னலெட்சுமி திருச்செல்வம் 06.09.2009 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரை ஐயர் கண்மணி தம்பதியினரின் அன்பு மகளும்,காலஞ்சென்றவர்களான ஞானம் இம்மானுவல் மேரிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும்,ஈ.ஆர்.திருச்செல்வத்தின் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) பாசமிகுமனைவியும், காலஞ்சென்ற மாதவி மற்றும் ஜெயகாந்தன், முரளிதரன் (கண்ணன்), கீதா (மக்கள் வங்கி, திருநெல்வேலிக் கிளை), ஜெயமுகுந்தன்(செலான் வங்கி, யாழ்ப்பாணம்), ஜெயராகவன் (இலங்கை வங்கி,பொலநறுவை) ஆகியோரின் பாசமிகு தாயாரும்; சாந்தினி, துஷ்யந்தினி,கிளென்சியஸ் லொயலா(உரிமையாளர், லொயலாஸ்), தமயந்தி (ஆசிரியை, யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), ராஜசூரியா ஜெசிமா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்ற மாக்கிரட் ராணியின் மைத்துனியும், வைதேகி, காலஞ்சென்ற தேவகி மற்றும் லாவண்யா, லக்ஸ்மன், பிரியங்கா , வைஷ்ணவி, கோபிநாத், எறின் கிளென்சியா, பிரதீனா ஆகியோரின் பேர்த்தியும்,சின்ராசாவின் (கொழும்பு) உடன் பிறவாச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனைகள் இன்று (08.09.2009) செவ்வாய்க் கிழமை பி.ப. 2.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று யாழ்.புனித மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.16, ஆசிர்வாதம் ஒழுங்கை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தகவல்: ஈ.ஆர்.திருச்செல்வம்

(3384)

## வடக்கு மா...

மாகாண கல்வி அமைச்சு ,மாகாண கல்வி[த்] திணைக்கள அதிகாரிகள் நேற்று யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ளனர்.

இந் நடமாடும் சேவை தொடர்பில் வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் தக[வல்] தருகையில்;

வடமராட்சி கல்வி வல[யத்]தில் இன்று ஆரம்பமா[கும்] நடமாடும் சேவை நா[ளை] யாழ்ப்பாணக் கல்வி வல[யத்]திலும் நாளை மறுதினம் [தென்]மராட்சி கல்வி வலயத்தி[லும்] ... ஆம், 12ஆம் திகதிக[ளில்] முறையே தீவகம், வலி[காமம்] கல்வி வலயங்களிலும் ந[டை] பெறும்.

இதில் ஒவ்வொரு [கல்வி] வலய அலுவலகத்[திலும்] காலை அதிபர்களுக்கான... டமும் நண்பகலுக்குப் பி[ன்] நடமாடும் சேவையும் [நடை] பெறும்.

இரண்டாம் கட்டமான [நட]மாடும் சேவை எதிர்வரும் ... ஆம் திகதி ஆரம்பமாகி க[ல்வி] வலய ரீதியாக நடைபெறும்.

இதில் வடக்கு மாகா[ண] கல்வி அமைச்சின் செயலா[ளர்] கலந்து கொள்வார்.

இந் நடமாடும் சேவை[யில்] கல்வி வலயக்கிளைகள் செ[யற்]பான அவதானிப்பு, க[ல்வி] அபிவிருத்தி போன்ற[வை] தொடர்பில் ஆராயப்படும் [என] றார். (ந-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.09.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.